உள்ளடக்க அட்டவணை

பக்க இல.

1.0 நிறைவேற்றுப் பொழிப்பு 1

1.1 அறிமுகம் 1

1.2 தூரநோக்கு, இலட்சியநோக்கு மற்றும் குறிக்கோள்கள் 1

1.3 பிரதான தொழிற்பாடுகள் 2

1.4 அமைப்பு வரைபடம் -..... 3

1.5 அதிகாரசபையின் பிரதான பிரிவுகள் 4

1.6 அதிகாரசபையின் கீழுள்ள நிறுவனங்கள்/ நிதியங்கள் 4

2.0 செயல்முன்னேற்றம் மற்றம் எதிர்கால கண்ணோட்டம்..... 5

- கைத்தொழில் சேவைகள் பிரிவு 8
- அபிவிருத்திப் பிரிவு 10
- மின்னியல் இயந்திர சேவைகள் பிரிவு 14
  - நிர்மாண உபகரண செயற்படுத்துனர் பயிற்சிப் பிரிவு 14
  - நிர்மாண உபகரண பராமரிப்பு பயிற்சிப் பிரிவு..... 18
- கைத்தொழில் பயிற்சிப் பிரிவு 23
  - வீடமைப்புத் திட்டமிடல் மற்றும் கட்டிடவாக்க நிலையம் 25
- மனித வள மற்றும் நிர்வாகப் பிரிவு..... 28

3.0 நிதிக் கூற்றுக்கள் 37

4.0 செயலாற்றல் குறிகாட்டிகள் 84

5.0 மனித வளக் கோவை..... 86

6.0 இணக்கப்பாட்டு அறிக்கை..... 87

நிர்மணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (சி.ஐ.டி.ஏ)

1.0 நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) இற்குப் பதிலாக 2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (சி.ஐ.டி.ஏ) ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

1.2 தூரநோக்கு, இலட்சியநோக்கு மற்றும் குறிக்கோள்கள்

தூரநோக்கு

"சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இலங்கையில் நம்பகரமான மற்றும் திறமையான நிர்மாணக் கைத்தொழிலை உருவாக்குதல்"

இலட்சியநோக்கு

"ஒரு தேசிய நிர்மாண கொள்கை அடிப்படையில் தொழில்முறையான சேவைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் கட்டுப்பாடுகள், திறன் விருத்தி, அபிவிருத்தி மற்றும் தர உத்தரவாதம் என்பவற்றினூடாக உள்ளூர் மற்றும் உலகளாவிய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் நிலையான தேசிய அபிவிருத்திக்காக நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு தந்துரோபாய தலைமைத்துவத்தை வழங்குதல்."

குறிக்கோள்கள்

2014 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் "நீண்ட தலைப்பு" நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் ஒட்டுமொத்த குறிக்கோள்களையும் நோக்கங்களையும் பின்வருமாறு பிரதிபலிக்கிறன :-

"இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில் வளர்ச்சியை நேக்காகக் கொண்டு பதிவு நடவடிக்கைகள் மற்றும் நிர்மாணக் கைத்தொழில் நடவடிக்கைகள் என்பவற்றை தரப்படுத்தி ஒழுங்குபடுத்துவதன் மூலம் நிர்மாண வேலைகளுக்கான தேசிய ஆலோசனைக் குழுவை நிறுவுவதற்கும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதியம் என்பவற்றை நிறுவுவதற்கும் தொழில் சார் நிபுணர்கள், உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், ஒப்பந்ததாரர்கள், மற்றும் கைவினைஞர்களின் முன்னேற்றம் மற்றும் நன்மைக்காக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான பிணக்குகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கும் இலங்கையில் நிர்மாணக் கைத்தொழில், பொதுமக்கள் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் அதற்கு இடைநேர் விளைவான விடயங்கள் மற்றும் நிகழ்வுகளுக்காக இயற்றப்பட்ட ஒரு சட்டமாகும்"

1.3 பிரதான தொழிற்பாடுகள்

- கௌரவ அமைச்சரினால் வழங்கப்பட்ட வழிகாட்டலுக்கு அமைய நிர்மாண தேசிய கொள்கையை செயல்படுத்துவதை உறுதிப்படுத்தல்.

- நிர்மாணக் கைத்தொழில் துறையில் நிலைபேறான வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் மேம்பாட்டை சாதிப்பதில் நிர்மாணக் கைத்தொழில் பங்குதாரர்களுக்கு மூலோபாயத் தலைமைத்துவத்தை வழங்குதல்.

- அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் நிர்மாணக் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்டவர்களின் பதிவை புதுப்பித்தல் மற்றும் பதிவு செய்தல்.

- ஆற்றல் மிக்க கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்கு சிறப்புக் கவனம் செலுத்தி நிர்மாணக் கைத்தொழிலின் நிலையான வளர்ச்சியை ஊக்குவித்தல்.

- நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அதன் வளர்ச்சிக்கு எந்த விடயங்களில் ஆராய்ச்சி, பிரச்சாரம், ஆய்வுப் பணிகள் மற்றும் வெளியீடுகள் தேவைப்படுகின்றனவோ அவற்றை ஊக்குவித்தல்.


- நிர்மாணக் கைத்தொழிலில் ஆலோசகர்களின் உயர்தொழிலுக்குரிய தரத்தை மேம்படுத்தல். நிர்மாணக் கைத்தொழிலில் உயர் தொழில்சார் அமைப்புக்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வேறு பிற அமைப்புக்களுக்கு உதவுதல்;

- நிர்மாணக் கைத்தொழில் தொடர்பாக அதிகாரசபையினால் இயற்றியுள்ள ஒழுக்கவிதிக் கோவை, வழிகாட்டல்கள், நடைமுறைகள், செயல்முறைகள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை செயல்படுத்தல்.

சட்டத்தின் மூலம் விதந்துரைக்கப்பட்டுள்ள சகல தொழிற்பாடுகளும் உரிய கால எல்லைக்குள் செயற்படுத்தப்படுவதனை உறுதிசெய்வதற்காக அவை அனைத்தையும் உள்ளடக்கி கூட்டிணைந்த திட்டம் தயார் செய்யப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம் மற்றும் 2020 - 2024 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் என்பவற்றுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கால இலக்குகளுடன் இணைந்த 2020 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்ட ஒவ்வொரு நடவடிக்கைகள் மற்றும் ஒவ்வொரு செயற்பாட்டிலுமிருந்து எதிர்பாக்கப்பட்ட வருமானம் மற்றும் அடையப் பெற்றுள்ள செயல் முன்னேற்றம் என்பன அந்தந்தப் பிரிவுகளின் கீழ் விரிவாக தரப்பட்டுள்ளன.

1.4 அமைப்பு வரைபடம்



1.5 CIDA இன் பிரதான பிரிவுகள்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) தனது தொழிற்பாடுகளை நான்கு தொழிற்பாட்டுப் பிரிவுகளின் ஊடாக மேற்கொள்கின்றது. பின்வருமாறு ஒவ்வொரு பிரிவும் ஒரு பணிப்பாளரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது:

அ. கைததொழில் சேவைகள் பிரிவு
ஆ. அபிவிருத்திப் பிரிவு
இ. மின் எந்திரவியல் சேவைகள் பிரிவு
ஈ. கைத்தொழில் பயிற்சிப் பிரிவு

1.6 அதிகாரசபையின் கீழுள்ள நிதியங்கள் / நிறுவனங்கள்

1. நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை நிதியம் - உள்வாரி நிதியம்
2. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் - ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

2.0 செயல்முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

கைத்தொழில் சேவைகள் பிரிவு

தொழில்நுட்ப விவரக்குறிப்புகள், நியம கேள்விகோரல் ஆவணங்கள் மற்றும் கட்டுமானப் புள்ளிவிபரக் விபரக்கொத்து ஆகியவற்றை வெளியிடுதல், தொழில்நுட்ப மற்றும் கொள்வனவு சிக்கல்களில் ஆலோசனை சேவைகளை வழங்குதல், தகராறு தீர்ப்பனவு மாற்றுவழி நடைமுறைகளை எளிதாக்குதல், தொழில்நுட்ப கணக்காய்வை நடத்துதல், கட்டுமானப் பொருளாதாரம் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்துதல், நடுவர் தீர்ப்பாளர்களை பதிவு செய்து கண்காணித்தல், அடையாளம் காணப்பட்ட கட்டுமானப் பணிகளின் பதிவேட்டைப் பராமரித்தல் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம் கைத்தொழில் சேவைகள் பிரிவு கட்டுமானத் தொழிலை எளிதாக்கி அதனை ஒழுங்குபடுத்துகிறது. இப்பிரிவு, வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள், ஒப்பந்ததாரர்கள், கொள்கை வகுப்பாளர்கள், முதலீட்டாளர்கள், திட்டமிடுபவர்கள் போன்ற கட்டுமானத் துறையிலுள்ள ஆர்வமுள்ள தரப்பினர்களுக்கு வினைத்திறனான சேவைகளை வழங்குகிறது.

கைத்தொழில் சேவைகள் பிரிவு இரண்டு துணைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை ஆலோசனை சேவைகள் மற்றும் கட்டுமான சிக்கனம் என்பனவாகும்.

அ) ஆலோசனை சேவைகள்

ஆலோசனை சேவைகள் என்பது தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் கட்டுமான நிபுணத்துவம் ஆகியவற்றின் கலவையாக காணப்படுவதுடன் இது மூலதனம் மற்றும் மீண்டெழும் பணிகளை உள்ளடக்கியதாகும். கட்டுமானத் துறையை மேம்படுத்துவதே எங்கள் பணியாக காணப்படுகின்ற அதேவேளை, பொது மற்றும் தனியார் துறை வாடிக்கையாளர்கள் ஒப்பந்த விடயங்களில் தெளிவான விளக்கம் மற்றும் ஆலோசனைகளை அதிகளவில் எதிர்பார்க்கின்றனர்.

2020 ஆம் ஆண்டில் ஆலோசனை சேவைகள் துணைப் பிரிவினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தகராறு தீர்க்கும் சேவைகளை வழங்குவதற்காக நடுவர் தீர்ப்பாளர்களை பதிவு செய்தல்.

  2016 ஆம் ஆண்டு முதல் CIDA இன் இணையதளத்தில் நடுவர் தீர்ப்பாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின்படி, நடுவர் தீர்ப்பாளர்களை பதிவு செய்வது அவசியம். 2019 ஆம் ஆண்டில் ஒரு வர்த்தமானி அறிவித்தல் பூரணப்படுத்தப்பட்டதுடன் 50 நடுவர் தீர்ப்பாளர்கள் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
  ஒப்பந்தத்தின் தரப்பினரின் வேண்டுகோளின் பேரில் 2020 ஆம் ஆண்டில் 13 நடுவர் தீர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- தரப்படுத்தல் முகாமைத்துவ கணக்காய்வாளர்களை பதிவு செய்தல் மற்றும் உரிமையாளரின் அல்லது ஏதேனும் அரசாங்க அமைப்பின் வேண்டுகோளின் பேரில் அடையாளம் காணப்பட்ட எந்தவொரு கட்டுமானப் பணிகளையும் தொழில்நுட்ப கணக்காய்விற்கு உட்படுத்துதல்.
  1. பலபிட்டிய பிரதேச சபை
  2. நீர்கொழும்பு மாநகர சபை

- பிணக்குத் தீர்வு சேவைகளுக்கு மத்தியஸ்தர்களை நியமித்தல் மற்றும் கட்டுமானத் தொழிலுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

  கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்த நிருவாகம், தகராறுகளை தீர்த்துவைத்தல், விலை ஏற்றத்தாழ்வுகளிற்கான CIDA சூத்திரமுறை, CIDA நியம கூறுவிலை ஆவணங்கள், தொழில்நுட்ப நியமங்கள், தொழில்நுட்ப விபரக்குறிப்புகள் மற்றும் வழிகாட்டல்கள் போன்றவற்றுடன் தொடர்புடைய ஆலோசனைச் சேவைகளை இப்பிரிவு வழங்குகின்றது.

  மேற்கூறிய விடயப்பரப்புகள் தொடர்பில் ஒப்பந்த சிக்கல்களை எதிர்கொண்ட ஏராளமான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து வாய்மொழி மற்றும் எழுதப்பட்ட ஆலோசனை சேவைகள் கோரப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பாக 620 ஆலோசனை சேவைகள் 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

  2020 ஆம் ஆண்டில் பின்வரும் மத்தியஸ்தங்கள் நடத்தப்பட்டன.

1. சிலோன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் 90 (பிரைவேட்) லிமிடெட். – மக நெகும வீதி நிர்மாண உபகரண நிறுவனம். கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து பணத்தை அறவிடுவதற்கான மத்தியஸ்தம்.

2. ஆர் எம் பெரேரா பிரைவேட் லிமிடெட். – தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு. உட்கட்டமைப்பு வேலைக்கான இறுதி கட்டணச் சான்றிதழின் தீர்மானம் - தொலைத்தொடர்பு மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சு.

3. மைக்ரோ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் – கொட்டஹேன, கொழும்பு 13 இல் அமைந்துள்ள குட் செபேட கொன்வன்ட்.
முன்மொழியப்பட்ட முன்று மாடி கேட்போர் கூட மண்டபத்தின் கட்டுமானம் - கட்டம் I

- கட்டுமானத் துறையின் இயலளவை மேம்படுத்துவதற்காக மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் 25 மாவட்டங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள். CIDA இன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 17 மாவட்டங்களில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

CIDA இன் பதிவு செய்தல்கள் (C7 க்கு கீழ், புதுப்பித்தல், மேம்படுத்துதல்), வெளிக்கள விஜயங்கள் (டெங்கு விழிப்புணர்வு விஜயங்கள், பாரிய செயற்திட்ட விஜயங்கள் முதலியன), ஆலோசனை சேவைகள், கருத்தரங்குகளை நடத்துதல், கைவினைஞர் பதிவுகள் (NCASL & DS அலுவலக விஜயங்கள்), கைவினை ஒப்பந்த தொகுதி / திறன் அபிவிருத்தி செயற்திட்டம், மாவட்டக் குழுக் கூட்டத்திற்கான CIDA பிரதிநிதித்துவம், தலைமை அலுவலகத்தினால் வழங்கப்படுகின்ற அவசர அலுவலகப் பணிகள் மற்றும் சிறப்புப் பணிகளுக்கு ஆன்லைனில் பதிலளித்தல் (பசுமைப் பொருள் ஆய்வு, சாலை ஆய்வு, கட்டுமானம் மற்றும் இடிப்பு கழிவு முகாமைத்துவ கணக்கெடுப்பு, விபரக்குறிப்புக்கான தரவு சேகரிப்பு, கட்டுமானப் பொருள் பற்றாக்குறை கணக்கெடுப்பு போன்றவை.) இவர்களின் பணியாகும்.

2020 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக நடத்தப்பட்ட கருத்தரங்குகள்

1. கட்டுமானத்தில் கான்கிரீட் மற்றும் இரும்பு வேலைகள்
2. இலங்கையில் நிர்மாண ஒப்பந்தங்களை நிர்வகித்தல்.
3. கான்கிரீட் & R/f வடிவமைப்பு
4. கட்டுமானத் தொழில் கேள்விப்பத்திர நடைமுறை, பணம் செலுத்துதல் மற்றும் விலைமுரண்கள்
5. விகிதப் பகுப்பாய்வு

(ஆ) **கட்டுமான சிக்கனங்கள்**

கட்டுமானப் பொருளாதாரம் என்பது, செயற்திட்டம் முழுவதிலும் நடைமுறைச் சாத்தியமான மற்றும் நிலைபேறான நிதி தீர்மானங்கள் எடுக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், செயற்திட்ட ஆரம்பம் முதல் நிறைவு வரையிலான கட்டுமான செயல்முறையை சிக்கனமாக்குவது ஆகும்.

2020 ஆம் ஆண்டில் கட்டுமான சிக்கன துணைப்பிரிவினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

• இலங்கை நிர்மாணத்துறையில் உள்ளூர் நிர்மாண நிர்மாணிப்பாளர்களை சர்வதேச வர்த்தக நாமங்களாக உருவாக்குவதற்காக, அடையாளம் காணப்பட்ட நிர்மாண நடவடிக்கைகளுக்குத் தேவையான வெளியீடுகள், செயலாக்கம் மற்றும் மீள்பார்வை விவரக்குறிப்புகள், நியம ஆவணங்கள், நியம கேள்விகோரல் ஆவணங்களைத் தயாரித்தல்.

2020 இல் வெளியிடப்பட்ட ஆவணங்கள்;

1. கோவிட் -19 மற்றும் டெங்குவிற்கான உடல்நலம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் வழிகாட்டல்கள். (ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ்)
2. நீர் வழங்கல் கழிவுநீர் மற்றும் மழைநீர் நீர் வடிகால் (SCA/3/2) அமைப்புக்கான விவரக்குறிப்புகள்
3. கட்டுமானம் மற்றும் இடிப்பு கழிவு முகாமைத்துவம்
4. பிரதான ஒப்பந்த வேலைகளுக்கான SBD -2 மற்றும் வடிவமைப்பு கட்டிட ஒப்பந்தங்களிற்கான SBD 4 – வரைவுகள் NPC இற்கு அனுப்பப்பட்டன.

• கட்டுமான மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான கொள்முதல் உத்திகள் மற்றும் சிறப்பு பணிகளில் ஆலோசகர்கள், வல்லுநர்கள் மற்றும் நிறுவனங்களை ஈடுபடுத்துதல்.

• நகர அபிவிருத்தி திட்டங்களுக்கு ஏற்ப அனைத்து நகர்ப்புற கட்டுமானங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும், அவற்றை உள்ளூர் வியாபாரக் குறியாக மாற்றுவதற்கும், அனைத்து

கட்டிடங்களையும் நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் பெறுவதற்கு எடுக்கும் நேரத்தை மூன்று வாரங்களாகக் குறைப்பதற்கும் தேசிய கட்டிடக் குறியீட்டை நிறைவுசெய்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இதன்மூலம் இலங்கையின் கட்டுமானத் துறை ஒரு சர்வதேச வர்த்தக நாமமாக உருவாக்கப்படும்.

• கட்டிடக் கலைஞர்கள் நிறுவனம், பொறியியல் நிறுவனம், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைந்து, கட்டுமானத் துறையில் இலங்கையை சர்வதேச அளவில் உள்ளூர் வர்த்தக நாமமாக உருவாக்குவதற்குத் தேவையான கட்டுமானத் திட்டங்களிற்குரிய நிர்மாணப் பொருட்கள், கூறுகள் மற்றும் செயல்முறைகள் தரப்படுத்தப்பட்டது. .

• கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கம் குறித்த மாதாந்த விபரத்திரட்டை வெளியிடுவதன் மூலம் கட்டுமானத் துறையிலுள்ள ஆர்வமுடைய தரப்பினரை தரப்படுத்தல்

இவ்விபரத் திரட்டுக்காக பொருட்களின் விலைகள், ஊழியர் கூலிகள், பொறிகளின் வாடகைக் கட்டணங்கள் ஆகிய விலைச்சுட்டிகள் சேகரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு பகுப்பாயப்பட்டன. இந்த விபரத் திரட்டுக்கள் முக்கியமாக ஒப்பந்தக் கருத்திட்டங்களில் உள்ளீடுகளின் விலை ஏற்ற இறக்கங்களைக் கணக்கிடுவதற்கான சுட்டிகளாகப் பயன்படுத்துகின்றன. இந்த வருடத்தில் நிர்மாணத்துறை செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு சுமார் 760 விவரத்திரட்டுகள் விற்பனை செய்யப்பட்டன.

விபரத் திரட்டினை வெளியிடும் செயல்முறையை மீளாய்வு செய்வதற்கும் ஆலோசனை வழங்குவதற்கும் பின்வரும் நிறுவனங்களை உள்ளடக்கிய ஒரு குழு நிறுவப்பட்டது.

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபை
2. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை
3. இலங்கையின் முக்கிய நிர்மாணிப்பாளர்கள்
4. இளம் நிர்மாணப்பாளர் மன்றம்
5. கட்டிடங்கள் திணைக்களம்
6. நீர்ப்பாசனத் திணைக்களம்
7. அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

• பொறியியல் பணியாளர்கள் இல்லாத அரச நிறுவனங்கள் மற்றும் அரச துணை நிறுவனங்களுக்கு ஆண்டு முழுவதும் செயற்திட்ட முகாமைத்துவ சேவையை பராமரித்தல்.

தொழில்நுட்ப பணியாளர்கள் காணப்படாத அரச நிறுவனங்கள் தமது கட்டுமான செயற்திட்டங்களுக்கான செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை இந்த பிரிவில் இருந்து அடிக்கடி கோருகின்றன. நாங்கள் இந்த சேவைகளை அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கும்போது, செயற்திட்ட நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள உள்வாரி ஊழியர்களின் இயலுமைகளையும் மேம்படுத்துகின்றோம். இந்த சேவையானது கொள்முதல் செயல்முறை, கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆலோசகர்களைத் தேர்ந்தெடுத்தல், கேள்விப் பத்திரங்களை மதிப்பீடு செய்தல், ஒப்பந்த நிர்வாகம் மற்றும் கட்டணச் சான்றிதழ்களைத் தயாரித்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.

2020 ஆம் ஆண்டில் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் வழங்கப்பட்ட முக்கிய நிறுவனங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

1. தென்னை அபிவிருத்தி அதிகாரசபை
2. ஏலமிடல் கூடத்தை புதுப்பித்தல்
3. இலங்கை தேயிலை சபை
4. அவசரகாலத்தில் மேலதிக மாற்றுவழிகள் - ஆய்வுகூட கட்டிடத்தின் தீவிபத்து வெளிச் செல்லல்

அபிவிருத்திப் பிரிவு

1.0 நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான தேசிய பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டம்

ஏதேனும் குறித்துரைத்த ஒப்பந்தத்திற்கு தொடர்பு இன்றி கருத்திட்டங்களின் வேறு விதமான வகைகளையும் அளவுகளையும் பொறுப்பேற்பதற்கான ஒப்பந்தக்காரர்களின் பொதுவான தகுதியை நிர்ணயிப்பதற்காக உத்தேச ஆற்றல்களுக்கான ஒரு அளவீட்டு நடைமுறையாகவே பதிவும் தரப்படுத்தலும் விளங்குகின்றன. ஒப்பந்தக்காரரின் தொழில்நுட்ப மற்றும் நிதிசார் நிலையைப் பரிசீலிப்பதன் மூலம் பதிவும் தரப்படுத்தலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டில் 2019 எண்ணிக்கையிலான புதிய பதிவுகள் வழங்கப்பட்டு, ஒப்பந்தக்காரர்கள் தரமுயர்த்தப்பட்டதுடன் அவர்களது பதிவுகள் புதுப்பிக்கப்பட்டன.

(*) இணையத்தளம் ஊடான ஒப்பந்தக்காரர்கள் பதிவுகள் கண்காணிப்பு முறைமை (CCPMS) மற்றும் தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் முறைமை (NCIIS)

CCPMS

CIDA சட்டத்தின் 40 வது பிரிவின் பிராகரமான வர்த்தமானி அறிவித்தலின் படி இந்த முறைமை நிறுவப்பட்டுள்ளது.

ஒப்பந்தக்காரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த தனித்துவம் வாய்ந்த நிகழ்நிலை கண்காணிப்பு முறைமையின் ஊடாக ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் செயற்திட்டத்திலிருந்து செயற்திட்டத்திற்கான தங்களது தகவல்களை அவர்களது மதியுரைஞர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் மூலம் தெரிவிக்க வேண்டும். வேலை வழங்குபவர், மதியுரைஞர், பொறியாளர் அல்லது ஒப்பந்ததாரர் உள்ளிட்ட ஒரு ஒப்பந்தத்திற்கான அனைத்து உள்ளீடுகள், அபிப்பிராயங்கள், அனைத்துத் தரப்பினரின் கருத்துக்கள் ஆகியவற்றை இந்த முறைமை பயன்படுத்துகிறது. அத்தகைய உள்ளீடுகள், அபிப்பிராயங்கள், பின்னூட்டல்கள் என்பன இறுதியாக ஒரு ஒப்பந்தக்காரரின் மதிப்பீட்டை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

C4 தரத்திற்கு மேற்பட்ட அனைத்து ஒப்பந்ததாரர்களும் அதிகாரசபையால் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு இயலுமான விதத்தில் இந்த முறைமையில் பதிவு செய்தல் வேண்டும்.

தற்போது, இந்த நிகழ்நிலை கண்காணிப்பு முறைமையில் 134 சேவைநாடுனர்கள்/வேலைகொள்வோர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், இந்த முறைமைக்கு மதியுரைஞர்கள் மற்றும் சேவைநாடுனர்களின் கருத்துக்கள் ஆரோக்கியமானதாக காணப்படவில்லை. எனவே இந்த முறைமை குறைந்த வேகத்திலேயே இயங்குகின்றது.

NCIIS

என்.சி.ஐ.எஸ் என்பது இலங்கையின் நிர்மாணத் துறையின் செயற்பாட்டு முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் அறிக்கையிடவும் உருவாக்கப்பட்ட வலையமைப்பு ஆகும். ஒப்பந்தக்காரர் பதிவு, நிர்மாணத் தொழில் விதிமுறைகள், நிர்மாணம் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் எந்தவொரு தனிநபரின் பயன்பாட்டிற்கான மேம்பாடு ஆகியவற்றின் தேசிய தரவுகள் இதில் உள்ளடங்கியுள்ளன. தொழில்துறையில் பங்களிக்கும் காரணிகளின் ஏற்ற இறக்கங்கள், அரசாங்க சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் செயல்திறன் போன்ற கிடைக்கக்கூடிய உண்மைத் தரவுகளிற்கமைய இது தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்படும்.

வலைப்பின்னலின் மேம்பாட்டுப் பணிகள் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிறைவடைந்துள்ளதுடன் தேவையான விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு, அதிகாரசபை சட்டத்தின்படி சட்டப்பூர்வ ஆதரவை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவை வெளியிடப்பட உள்ளன.

இலங்கையில் அதிக உற்பத்தித்திறன் மற்றும் பயனுள்ள தொழிற்துறையை எளிதாக்கும் வகையில் உலகளாவிய நிர்மாண சமூகத்திற்கு ஒரு தேசிய சேவையாக தரவு சேகரிக்கும் இப்பொறிமுறையை விரைவில் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முறைமை 2021 இன் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும்.

2.0 ஆதன அபிவிருத்தியாளர்களை பதிவுசெய்தல்

ஆர்வமுள்ள தரப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து, இறுதி பயன்பெறுனர் திருப்தி மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையை மேம்படுத்துவதும், பிணக்குகளை குறைப்பதும், தொழில்துறையின் பிரதிவிம்பத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் ஆதன அபிவிருத்தித் தொழிலை நெறிப்படுத்துவதுமே ஆதன அபிவிருத்தியாளர்களை பதிவுசெய்வதன் நோக்கங்களாகும்.

தற்போது வரையிலுமான செயன்முறை மற்றும் செயல்முன்னேற்றம்

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் படி, ஒழுங்குவிதிகளும் அதனைத் தொடர்ந்து 2181/21 ஆம் இலக்க 2020 யூன் 25 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

தேவைப்பாடுகளை கடைபிடிக்குமாறு கோரி அனைத்து ஆதன அபிவிருத்தியாளர்களிற்கும் விழிப்புணர்வு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

02 ஆதன அபிவிருத்தியாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டின் இறுதியில் சுமார் 10 விண்ணப்பங்கள் பெறப்பட்டு மீளாயப்பட்டு வருகின்றது.

3.0 வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களின் தற்காலிக பதிவு

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 39 மற்றும் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2085/19 வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களின் பதிவு மற்றும் வேலை வாய்ப்பு முறைப்படுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் அனைத்து பங்குதாரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுவால் தயாரிக்கப்பட்ட அளவுகோல்கள் பணிப்பாளர் சபையால் முறையாக அங்கீகரிக்கப்பட்டன.

எனவே, வெளியிடப்பட்ட வர்த்தமானியின் விதிகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்களின் விண்ணப்ப மதிப்பீட்டு செயல்முறையை வலுப்படுத்துதல் இன்றியமையாததாகும். மேலும், வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் போது ஏற்கனவே வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ள ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்காக, கடுமையான தேவைகளுக்கு இணங்காத நியாயமான பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

மேலும், நம்பகத்தன்மை மற்றும் தரநிலைகளைப் பேணுவதன் மூலம் பொறிமுறையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களுக்கு CIDA சில நலன்களையும் வழங்குகின்றது.

2020 சனவரி முதல் 2020 டிசம்பர் வரை 08 வெளிநாட்டு ஒப்பந்ததாரர்கள் CIDA இல் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

4.0 தகுதிவாய்ந்த நபர்கள்/நிறுவனங்களின் பதிவு

2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 26 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் படி, நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையானது (CIDA), ICTAD நிறுவனத்தின் சட்டரீதியான வாரிசாக காணப்படுவதுடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருதத்தி அதிகாரசபை என்ற வகையில், தொழில்முறைத் தராதரங்களை மேம்படுத்துவதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் நடைமுறைகளின் பதிவேட்டைப் பராமரிக்க வேண்டுமென அது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

பின்வரும் வகைகளின் கீழ் நபர்கள் மற்றும் மதியுரைச்சேவை வழங்குனர்களை பதிவு செய்வதற்கான நடைமுறைகளை CIDA பூரணப்படுத்தியுள்ளது.

அ) 1968 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை பொறியியலாளர் நிறுவனத்தின் ஆலோசனையுடன் பொறியியலாளர்களை பதிவுசெய்தல்.
ஆ) 1976 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கட்டிடக் கலைஞர்கள் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டிடக் கலைஞர்கள் நிறுவனத்தின் உதவியுடன் கட்டிடக் கலைஞர்களை பதிவுசெய்தல்.
உ) 2007 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை (ஒருங்கிணைத்தல்) சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட நில அளவீட்டாளர்கள் நிறுவனத்துடன் கலந்தாலோசித்து, நில அளவீட்டாளர்களை பதிவுசெய்தல்

பின்வரும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2020 திசெம்பர் 31 வரை பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக காத்திருக்கப்படுகின்றது.

➢ **இலங்கை மதியுரைஞர் நடைமுறைகள்**

- இலங்கை மதியுரைஞர் நடைமுறைகளை பதிவு செய்வதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்
- இலங்கை மதியுரைஞர் நடைமுறைகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

➢ **வெளிநாட்டு மதியுரைஞர் நடைமுறைகள்**

- வெளிநாட்டு மதியுரைஞர் நடைமுறைகளின் தற்காலிக பதிவுக்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள்
- வெளிநாட்டு மதியுரைஞர் நடைமுறைகளின் தற்காலிக பதிவுக்கான விண்ணப்பம்

5.0 நிர்மாணத்துறை சிறப்புத் திறமைக்கான CIDA விருதுகள்

நிர்மாணத்துறையில் உயர்தொழில்சார் பண்பினையும் திறமையையும் மேம்படுத்தும் நோக்கில் 1990 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட வருடாந்த விருது வழங்கும் திட்டம் 30 ஆவது முறையாகவும் 2019 இல் நடாத்தப்பட்டது. நிர்மாண முகாமைத்துவத்தில் முதன்மையான செயலாற்றல், தொழில்நுட்ப நிபுணத்துவம், தரம், உயர்தொழில் தன்மையின் உயர் மட்டம், புத்தாக்கத்திறனுக்குரிய பொருத்தமான தொழில்நுட்பத்தின் அறிமுகம், பயிற்சியில் கைவினைஞர்களின் பங்கெடுப்பு ஆகியவற்றை இவ் வெகுமதித் திட்டம் அங்கீகரிக்கின்றது.

2020 ஆம் ஆண்டிற்கான விழாவை 2020 திசெம்பரில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், கொவிட் 19 நோய்தொற்று காரணமாக அது பிற்போடப்பட்டது. 2020 ஆம் ஆண்டிற்கான விருதுகளின் இறுதி மதிப்பீடுகள் 2020 ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் நடைபெற்றன. 2020 ஆம் ஆண்டிற்கான விருது வென்றவர்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விருதிகளை வென்றோர் 2020

கட்டிட செயற்திட்டங்களிற்கான தேசிய நிர்மாணத்துறை சிறப்பு விருதுகள் மற்றும் திறமை விருதுகள்

இல	செயற்திட்டம் / விருதுபெற்றோர்	விருதின் வகை
01	வோன்லன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இனால் அனுராதபுரத்தில் குணவர்தன ஆயுர்வேத ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்திற்காக ஆயுர்வேத மருத்துவமனை கட்டிட நிர்மாணம்.	சிறப்பு
02	கொழும்பு 08 இல் சதுதா பில்டிங் (பிரைவேட்) லிமிடெட் இனால் கொழும்பு 08 இல் உள்ள முதுகலை மருத்துவ பல்கலைக்கழகத்தின் ரோட்னி வீதி அபிவிருத்தி திட்டங்கள்	சிறப்பு
03	நசீஹா ஹார்ட்வேர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனத்தால் வந்தாறுமூலையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்திற்கான கட்டிடத் தொகுதியின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்	திறமை
04	ஸ்ரீபாலி கான்ட்ராக்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் இனால் தெஹிவளை கவுன்சில் லேனில் இலங்கை மின்சார சபையின் பிரிவு 4 விநியோக நிறுவன அலுவலக கட்டிட நிர்மாணம்.	திறமை
05	ராஜகிரியவில் மதுவரி திணைக்களத்திற்கான தலைமை அலுவலகக் கட்டிடத்தை வி.கருணாரத்னரூ நிறுவனத்தினால் நிர்மாணித்தல்.	திறமை

பகுமை நிர்மாண சிறப்புகளிற்கான தேசிய விருதுகள்
பெறுபேறுகள்

	செயற்திட்டம் / விருதுபெற்றோர்	விருதின் வகை
01	ஹோமாகம இல் இன்டர்நெஷனல் கொன்ஸ்ட்ரக்ஸன் கொன்சோர்டியம் (பிரைவட்) லிமிடட் இனால் மாரட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தை (ITUM) வடிவமைத்து, நிர்மாணித்து, மீளவைத்து, அபிவிருத்திசெய்தல்.	சிறப்பு

சிவில் பொறியியல் செயற்திட்டங்களில் நிர்மாணச் செயலாற்றலுக்கான தேசிய விருது
(உள்நாட்டு நிர்மாண ஒப்பந்தகாரர்களால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செயற்திட்டங்களுக்கான விருதுகள்)

பெறுபேறுகள்

	செயற்திட்டம் / விருதுபெற்றோர்	விருதின் வகை
01	சன்கன் ஓவர்சீஸ் (பிரைவட்) லிமிடட் இனால் மியன்மார், திலாவை இல் யங்கோன் துறைமுகத்தை விரிவுபடுத்துதல்	செயலாற்றல் விருது

சிவில் பொறியியல் செயற்திட்டங்களில் நிர்மாணச் செயலாற்றலுக்கான தேசிய விருது
(நிர்மாணங்களில் புத்தாக்க தொழில்நுட்பங்களுக்கான விருது)
பெறுபேறுகள்

	செயற்திட்டம் / விருதுபெற்றோர்	விருதின் வகை
01	இஎல்எஸ் கொன்ஸ்ட்ரக்ஷன் (பிரைவட்) லிமிடட் இனால் திருகோணமலையிலுள்ள கொட் குடா, சீனக் குடா இல் டோக்யோ சிமன்ட் லங்கா பிஎல்சீ இற்காக இறங்குதுறை வசதிகளை விரிவாக்குதல்.	செயலாற்றல் விருது

மின்னியல் மற்றும் இயந்திரவியல் செயற்திட்டங்களில் நிர்மாணச் சிறப்புகளிற்கான தேசிய விருது
பெறுபேறுகள்

	செயற்திட்டத்தின் பெயர்	விருதின் வகை
1	துடாவ இன்ஜினீயரிங் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடட் இனால் தொழில் ஆணையாளர் நாயகத்திற்காக உத்தேச பல்நோக்கு அலுவலகத் தொகுதியினை நிர்மாணித்தல் (2015/03/EM-LV)	சிறப்பு
2	துடாவ இன்ஜினீயரிங் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடட் இனால் தொழில் ஆணையாளர் நாயகத்திற்காக உத்தேச பல்நோக்கு அலுவலகத் தொகுதியினை நிர்மாணித்தல் (2015/03/EM-LV)	பாராட்டுச் சான்றிதழ்

நிர்மாணச் செயலாற்றலுக்கான தேசிய விருதுகள் - 2020
(சிவில் பொறியியல் செயற்திட்டங்கள்)

பெறுபேறுகள்

இல.	செயற்திட்டம் மற்றும் விருதுபெற்றோர்	விருதின் வகை
01	மாகா இன்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட் இனால் ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் திட்டம் -பொலன்னறுவை மாவட்டத்தில் 49 கிமீ கிராமப்புற வீதிகளை புனரமைத்தல்/மேம்படுத்துதல் - 3 ஆண்டுகளுக்கான செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு உள்ளிட்ட ஒப்பந்தம் 1, ஒப்பந்த இல. RDA/ADB/iROAD (NC)/NCB/CP-RR(PO1) எலஹர, தமன்கடுவ.	விருது
02	மாகா இன்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட் இனால் ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் திட்டம் - அனுராதபுரம் மாவட்டத்தில் 83 கிமீ கிராமப்புறச் வீதிகளை	விருது

	மறுசீரமைத்தல்/மேம்படுத்தல் - 3 ஆண்டுகளுக்கான செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு உள்ளிட்ட ஒப்பந்தம், ஒப்பந்த இல. RDA/ADB/iROAD (NC)/NCB/CP-RR(AP1) நாச்சதுவ, தலாவ, நொச்சியாகம, விலச்சிய, நுவர கம்பளாத்	
03	மாகா இன்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட் இனால் ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் திட்டம் - அனுராதபுரம் மாவட்டத்தில் 77 கிமீ கிராமப்புறச் வீதிகளை மறுசீரமைத்தல்/மேம்படுத்தல் - 3 ஆண்டுகளுக்கான செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு உள்ளிட்ட ஒப்பந்தம், ஒப்பந்த இல. RDA/ADB/iROAD (NC)/NCB/CP-RR(AP2) கெக்கிரவா, பலகல்ல, கல்னேவ, இபலோகம, ராஜாங்கனை, தம்புத்தேகம	விருது
04	இன்டர்நேஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கன்சோர்டியம் பிரைவேட் லிமிடெட் மூலம் பதுளை, ஹாலிஎல மற்றும் எல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தை அமுல்படுத்துதல் – WTP & DAM பதுளை- ஹாலிஎல இல் நிர்மாணித்தல்	விருது
05	எக்சஸ் இன்ஜனியரிங் பிஎல்சி இனால் பேலியகொட – புத்தளம் வீதியில் (A – 003) கொச்சிக்கடை பாலம் - பாலம் இல. 38/3 புனரமைப்பு.	விருது
06	எட்வர்ட் என்ட் கிரிஸ்டி இனால் கண்டி மாவட்டத்தில் கிராமப்புற வீதிகளை புனரமைத்தல் / மேம்படுத்துதல் ஒப்பந்தம் 3 - (KA 3) கண்டி மாவட்டம்	விருது
07	16+030 முதல் 45+250 கிமீ நாரம்மல வரையிலான நாரம்மல- தங்கொடுவ வீதியினை என்இஎம் கொன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் மூலம் புனரமைத்து மேம்படுத்துதல்.	விருது
08	மாகா இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் மூலம் அக்குரேகொட பத்தரமுல்ல, அக்குரேகொட பாதுகாப்பு தலைமையக திட்டத்தின் அபிவிருத்தியுடன் தொடர்புடைய வீதி வலைப் பணிகளுக்கான விரிவாக்கம் மற்றும் மேம்பாடுகள்.	விருது
09	எலஹெர – கிரித்தலே வீதி (சிஎச். 0+000 முதல் 29+000 கி.மீ. வரை) கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் மற்றும் கான்ட்ராக்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் மூலம் மேம்படுத்தப்பட்டமை.	விருது
10	மாகா இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் மூலம் ஒருங்கிணைந்த வீதி முதலீட்டுத் திட்டம் - குருநாகல் மாவட்டத்தில் 85 கிமீ கிராமப்புற வீதிகளை புனரமைத்தல்/மேம்படுத்துதல் - 3 ஆண்டுகளுக்கான செயல்ற்றல் அடிப்படையிலான பராமரிப்பு உள்ளிட்ட ஒப்பந்தம் 1, ஒப்பந்த இல. RDA/ADB/iROAD (NW)/NCB/CP-RR(KU1) பிங்கிரிய, உடுபத்தாவ, பண்டுவஸ்நுவர மேற்கு/கிழக்கு, குளியாபிடிய கிழக்கு.	விருது
11	மாகா இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் மூலம் B 157 (கிழக்கு) தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இருந்து மதுருகொடா வரையிலான (42+372 கிமீ முதல் 32+000 கிமீ வரை) புனரமைத்து/மேம்படுத்தல், 5 வருட செயலாற்றல் அடிப்படையிலான பராமரிப்பு, ஒப்பந்த இல. RDA/SRCP/ICB/ADB/CP-03 வெலிபன்னையிலிருந்து மத்துகம வரை	விருது

6.0 CIDA வின் தகவல் தொழில்நுட்ப முறைமை

துகவல் தொழில்நுட்ப முறைமையில் உள்ளடக்குவதற்காக பின்வரும் முக்கிய செயற்பாடுகள் இனங்காணப்பட்டன.

(அ) 2019/2020 ஆம் ஆண்டில் பின்வருவன பூரணப்படுத்தப்பட்டன.

1. தகைமையுள்ள நபர்களை பதிவுசெய்தல் முறைமை
2. கொடுப்பனவு நுழைவாயில் ஒருங்கிணைப்பு
3. இணையதள புனரமைப்பு
4. ஆவண முகாமைத்துவ முறைமை

(ஆ) பின்வரும் கொள்வனவு வேலைகள் / அபிவிருத்தி வேலைகள் ஆண்டின் போது இடம்பெற்று வருகின்றன.

1. ஆதன அபிவிருத்தியாளர் பதிவு முறைமை

2. வெளிநாட்டு ஒப்பந்தக்காரர் பதிவு முறைமை

3. நிர்மாணப் பொருட்கள் மற்றும் பாகங்களின் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்கள் பதிவு முறைமை

4. அடையாளம் காணப்பட்ட நிர்மாணப் பணிகள் தகவல் முறைமை

5. தர முகாமைத்துவ கணக்காய்வாளர்கள் பதிவு முறைமை

6. பொருள் கிரய கணிப்பீட்டு முறைமை

7. தீர்ப்பாளர்கள் பதிவு முறைமை

8. நிர்மாண இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பதிவு முறைமை

7.0 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாடுகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள்


இவ்வாண்டில் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன.

நடுத்தர மற்றும் குறைந்த வோல்டேஜ் கருவிகளை வடிவமைத்து பொருத்துதல் - பெப்ரவரி 12

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பிலான தகவலைப் பரப்புவதும் மற்றும் வருமான தோற்றுவிப்பை அதிகரிப்பதும் இந்த கருத்தரங்குகளை / செயலமர்வுகளை நடத்துவதன் நோக்கமாக உள்ளுத

மின் எந்திரவியல் சேவைகள் பிரிவு

நிர்மாண சாதனங்கள் செயற்படுத்துனர் பயிற்சி நிலையம் (OTC)



தூரநோக்கு:

"நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு தேவையான திறமையுள்ள உழைப்பாளர் படையணி ஒன்றை கட்டி எழுப்பும் நோக்கில் நிர்மாணத்துறையுடன் தொடர்புற்ற செயற்பாட்டு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான திறனையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதினூடாக அளவீடு செய்ய முடியுமான நிர்மாண உற்பத்தித் திறனை அடைவதே எமது இலக்காகும்."

இலட்சிநோக்கு:

"நிர்மாணக் கைத்தொழிலின் திறமைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் அறிவு, பராமரிப்பு மற்றும் நிர்மாண உபகரணங்களின் முகாமைத்துவத்தினூடாக திறமையுள்ள தொழிற்படையொன்றை நிர்மாணத் துறையில் உருவாக்குதல் மற்றும் அதனூடாக நிர்மணத்துறையின் பயனுறுதியை அளவிட முடியுமான ஒன்றாக மாற்றுதல்"

குறிக்கோள்கள்:



- நிர்மாணத்துறை சார்ந்த இயந்திர உபகரணங்களை இயக்கும் நபருக்கு தேசிய நியமங்களிற்கு ஏற்றாற் போல் பயிற்சி அளித்தல்
- பொறிகளின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை முகாமைத்துவ பயிற்சி நெறிகளை நடாத்துதல்
- நிர்மாணத்துறை இயந்திர சாதனங்கள் இயக்குனர்களுக்கான தேசிய தொழிற்றுறை தேர்ச்சிப் (NVQ) பரீட்சைகளை நடாத்தல்.
- நிர்மாண இயந்திரங்களை இயக்குகின்றவர்களின் திறனை அதிகரிப்பதினூடாக ஏற்புடைய பணிகளை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் நிறைவேற்ற முடியுமாதல்.
- நிர்மாணப் பணிகளுக்காக இயந்தி உபகரணங்களை வாடகைக்கு விடுதல்.
- அரசாங்க கருத்திடங்களில் ஒரு பகுதியைப் பெற்று புதிய இயக்குனர்களுக்கு அதிக அனுபவத்தைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

அறிமுகம்

நிர்மாண சாதனங்கள் உபகரண செயற்படுத்துநர் பயிற்சி நிலையமானது, கிராலர் டிராக்டர்கள், ஏற்றிகள், அகழ்வு உபகரணங்கள், மோட்டார் கிரேடர்கள் போன்ற நிர்மாண உபகரணங்கள் குறித்த பாதுகாப்பு, அடிப்படை பராமரிப்பு மற்றும் இயக்க உத்திகள் குறித்த சிறப்பு பயிற்சிகளை வழங்குகின்றது. OTC ஆனது 63 நிர்மாண உபகரணங்கள் மற்றும் போதுமான எண்ணிக்கையிலான பயிற்சி அதிகாரிகள் மற்றும் செயற்படுத்துநர்களைக் கொண்டுள்ளது.

பயிற்சியாளர்களுக்கு போதியளவு திறன்களைக் வழங்கும் நோக்கில் செயன்முறைப் பயிற்சிக்காக சுமார் 70% பயிற்சி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 30% கோட்பாட்டு ரீதியான பயிற்சிக்காக மட்டுமே உள்ளது. பயிற்சியாளர்களுக்கு செயன்முறைப் பயிற்சி அளிக்கும் அதேவேளை வருமானத்தை ஈட்டுவதற்காக சில நிர்மாண உபகரணங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

OTC பயிற்சித் திட்டங்கள் மேலே குறிப்பிட்டுள்ளபடி நிறுவனப் பயிற்சியையும், நடைபெற்றுவரும் நிர்மாண செயற்திட்டங்களின் செயன்முறைப் பயிற்சியையும் கொண்டிருக்கும். நிறுவன பயிற்சி முடிந்ததும் குறைந்தது மூன்று மாதங்கள் வேலைவாய்ப்புப் பெறும் ஒரு பயிற்சியாளர் NVQ க்கு தகுதியுடையவர் ஆகின்றார். நிர்மாண உபகரண செயற்படுத்துநர்களிற்கான NVQ பரீட்சைகளை எளிதாக்குவதற்காக செயன்முறைப் பயிற்சிகள் NAITA ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

பின்வரும் பயிற்சி நெறிகள் தற்போது இ.ச.ப.நி.(ழுவுஊ) இல் நடத்தப்படுகின்றன:

1. பூர்வாங்கப் பயிற்சி
    - 1.1. அடிப்படை நிர்மாணச் சாதனங்கள் பராமரிப்பு

2. திறன் அபிவிருத்தி
    - 2.1 பாரமற்ற நிர்மாணச் சாதனங்கள்
    - 2.2 தொட்டி பாரவண்டி
    - 2.3 பண்னை டிரக்டர்
    - 2.4 தன்னியக்க அதிர்வு பாதை ரோலர்

3. மணல் நகர்த்தும் சாதன அடிப்படை மட்டிசைப்புகள்
    - 3.1 நகரி டிரக்டர்
    - 3.2 சக்கரத்திலான சுமையேற்றி
    - 3.3 மோட்டார் கிரேடர்
    - 3.4 நீரியல் தோண்டி
    - 3.5 பின்வாரி ஏற்றி
    - 3.6 சக்கரத் தடை பளுவேற்றி

4. சிறப்பு சாதனங்கள்
    - 4.1 நடமாடும் கிரேன்
    - 4.2 பொறி ஏற்றி இறக்கி
    - 4.3 முள் வாரி ஏற்றி
    - 4.4 கிரேன் பாரவண்டி

5. தொழில் தேர்வுகள்
    - 5.1 NVQ தேர்வுகள

6. ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

    இலங்கை மின்சார சபைக்காக இரண்டு டிரக் மௌன்டட் கிரேன் செயற்படுத்துநர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்டன.

7. கருத்தரங்குகள் / செயலமர்வுகள்

    நிர்மாணத் துறையின் தேவைக்கேற்ப நிர்மாண உபகரண முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது திறன் தேர்வுகளை OTC நடத்துகின்றது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியாளர்களுக்காக சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

பயிற்சி வெளியீடு 2020

2019 ஆம் ஆண்டிற்கான இலக்கு பயிற்சிபெறுனர் வெளியீடுகள் மற்றும் ஒவ்வொரு பயிற்சித் திட்டத்துக்கான அடைவுகள் என்பன அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்)

அட்டவணை 1: பயிற்சி வெளியீடு 2020

	பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	வெளியீடு 2020	
		நிகழ்ச்சித்திட்ட எண்ணிக்கை	பங்குபற்றியோர் எண்ணிக்கை
1.0	பூர்வாங்க பயிற்சி		
	1.1 அடிப்படை நிர்மாண உபகரணப் பராமரிப்பு	10	223
2.0	திறன் அபிவிருத்தி		
	2.1 ஒளி உபகரணங்கள்	-	-
	2.2 டிராக்டர்	03	14
	2.3 சுய இயக்கப்படும் உருளை	01	02
	2.4 டம்ப் டிரக்	-	-
3.0	மணல் அகழ்வு உபகரண அடிப்படை தொகுதிகள்		
	3.1 கிராலர் டிராக்டர்	-	-
	3.2 வீல் லோடர்	02	10
	3.3 மோட்டார் கிரேடர்	02	15
	3.4 ஹைட்ராலிக் அகழ்வு	03	31
	3.5 பேக்ஹோ பாரந்தூக்கி	04	29
	3.6 ஸ்கிட் ஸ்டீயர் லோடர்	-	-
4.0	விசேட உபகரணங்கள்		
	4.1 மொபைல் கிரேன்	04	22
	4.2 பொறி டிரான்ஸ்போர்ட்டர்	03	18
	4.3 .்போர்க் லி.்ப்ட் ஆபரேட்டர்	02	8
	4.4 டிரக் ஏற்றப்பட்ட கிரேன்	10	52
	தனிப்பயனாக்கப்பட்ட திட்டங்கள்	03	50
	மொத்தம்	47	474

பயிற்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி

200 பேர்களை உள்ளடக்கும் இயலளவுடைய புதிய விரிவுரை மண்டபம் அமைத்தல்

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் வலுவூட்டலுடன் இணைந்ததாக நிர்மாணத் தொழிற்துறையில் OTC க்கு இன்னும் பரந்த பொறுப்புகள் உள்ளன. எனவே பங்குதாரர்களுக்கு மேலதகமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்காக புதிய விரிவுரை மண்டப நிர்மாணம் 2019 இல் ஆரம்பிக்கப்பட்டு 2020 இல் பூரணப்படுத்தப்பட்டது.

இந்த நிர்மாணத்தின் இறுதியில் புதிய தங்குமிட வசதிகள் பூரணப்படுத்தப்பட்டதுடன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பங்களிக்கின்ற வளவாளர்களின் வசதிகளையும் OTC கொண்டிருக்கும்.

நிர்மாண உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல்

நிர்மாண உபகரணங்களை வாடகைக்கு வழங்குதல் என்பது செயற்படுத்துநர் பயிற்சி கல்லூரியினால் வழங்கப்படும் மேலதிக சேவையாகும். இது கல்லூரிக்கு அதிக வருமானத்தை ஈட்டித்தருகின்றது. தற்போதுள்ள இயந்திரத் தொகுதியை பயன்படுத்துவதற்காக பயிற்சிக்கே முன்னுரிமை வழங்கப்படுவதுடன் கிடைக்கும்போது பயன்படுத்தப்படாதுள்ள இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதால் பணியமர்த்துவதற்கான உபகரணங்களின் கிடைக்கும் தன்மை அதிகரித்தது. எனவே, பயிற்சிகள் தொடங்கும் வரை, தொற்றுநோயின் இரண்டாம் அலை காரணமாக உபகரணங்கள் பணியமர்த்தல் மேம்பட்டது.

நிர்மாண செயற்திட்டங்கள்

வீரவிலவில் உள்ள திறந்த சிறை வேலை முகாமின் 150 ஏக்கர் காணியைச் சுற்றி தரை வாகனங்களுக்கான உள்ளக வீதி நிர்மாணிப்பு பணிகள் வீரவிலவில் நிறுவப்பட்ட அதன் துணை மையத்தைப் பயன்படுத்தி இயந்திர இயக்குனர் பயிற்சிக் கல்லூரி (OTC) ஆல் நடத்தப்பட்டது. சிறைச்சாலைகள் திணைக்களத்தின் எதிர்பார்ப்புகளுக்கு இணங்க இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இது , வீரவில OTC இனால் நடத்தப்பட்ட முதல் கட்டுமானத் திட்டமாவதுடன், இது பயிற்சி மற்றும் திட்டங்களை கையாள்வதற்கான அதன் திறனை நிரூபிக்கிறது.


2020 ஆம் ஆண்டில் இயந்திர இயக்குனர் பயிற்சிக் கல்லூரியின் வருவாய்


அட்டவணை: 2

தொழில் வகுதி	வருமானம் ரூபா
பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (கல்குலம)	6,581,000.00
இயந்திரங்களை வாடகைக்கு விடுதல்	6,013,000.00
கட்டுமானத் திட்டம் (வீரவில)	621,132.00
NVQ தேர்வு	-
தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி	770,000.00
இயந்திர இயக்குனர் அடையாள அட்டைகள்	120,000.00
நானாவித	
மொத்தம்	**14,105,132.00**

1. நிருமாண இயந்திசாதனப் பராமரிப்பு பயிற்சி நிலையம்

CIDA வின் நிர்மாண இயந்திரசாதனப் பராமரிப்பு பயிற்சி நிலையத்தின் பொறிமுறை பயிற்சி அலகானது (CETRAC) பத்தரமுல்ல, பெலவத்த, டி.பி.விஜேசிங்க மாவத்தையில் 17 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. நவீன நிருமாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு மீது ஏதாவது பயிற்சி பாடநெறியை நடத்துவதற்கான முழு வசதிகளையும் CETRAC கொண்டுள்ளது. கருத்திட்ட மற்றும் பராமரிப்பு முகாமையாளர்கள், இயந்திய பொறியியலாளர்கள், தொழிற்சாலை மேற்பார்வையாளர்கள், சிரேஷ்ட இயந்திரவியலாளர்கள், இயந்திர உதவியாளர்கள் மற்றும் பாடசாலை விலகியோர் ஆகியோருக்கான பயிற்சி நெறிகளும் CETRAC நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.





1.1 CETRAC இன் பயிற்சித் திட்டங்கள்

1996 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2001 செப்டம்பர் மாதம் வரையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்புக் கருத்திட்ட காலத்தின் போது ஜப்பானிய நிபுணர்களின் உதவியுடன் CETRAC இன் பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பொறிமுறையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் எந்திரவியலாளர்கள் ஆகியோருக்கு நிர்மாண இயந்திர சாதனங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியை CETRAC வழங்குகின்றது. CIDA வினால் கட்டிட சேவை பொறியியல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் CETRAC இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1.2 நிர்மாணக் கைத்தொழிலுக்கு புதிதாகச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சி நெறிகள்

இளைஞர்களின் தொழிலின்மை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவதற்காக பாடசாலைகளை விட்டு முன்கூட்டியே விலகுபவர்களுக்கு அதிகளவு தொழில்முன்னிலைப் பயிற்சி நெறிகளை விருத்தி செய்வதற்கும் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் பின்வரும் பாடநெறிகள் நடத்தப்பட்டன.

1.3 நிர்மாண உபகரணங்கள் இயந்திரவியல் பாடநெறி

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடனான (NAITA) கூட்டு முயற்சியுடன் நிர்மாண உபகரணங்கள் இயந்திரவியல் பாடநெறி நடத்தப்படுகிறது. இது இரண்டு வருட பயிற்சிப் பாடநெறி என்பதுடன் CETRAC இல் 12 மாதங்களைக் கொண்ட நிறுவனரீதியான பயிற்சியையும் தொழில் நிலையங்களில் 12 மாதங்களைக் கொண்ட செயல்முறைப் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளது. இப்பயிற்சி நெறியை க.பொ.த. (சா/த) பரீட்சையுடன் பாடசாலையை விட்டு வெளியேறுவோர் பின்பற்றுவதற்கு தகுதிபெற்றவர்களாவர். வருடமொன்று 120 பயிற்சியாளர்கள் உள்வாங்கப்படுகின்றனர்.

இலவச தங்குமிடவசதி, பாடநெறிச் சாதனங்கள், வேலைத்தள வசதிகள், சீருடைகள், பாதுகாப்புக் கருவிகள் ஆகியன பயிற்சிக் காலத்தின் போது அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த சகல முன்னாள் பயிற்சியாளர்களும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயனுள்ள வகையில் தொழிலாற்றுகின்றார்கள். இவர்களில் சிலர் நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்களுக்கும் பராமரிப்புக்கும் தமது சொந்த வேலைத்தளங்களைத் தாபித்துள்ளார்கள்.

இந்தப் பயிற்சிநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்வோருக்கு NVQ மட்டம் 4 சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

உழியர்களின் திறன்களை தரமுயர்த்துவதற்கான மேலதிகப் பயிற்சி நெறிகள்

நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டுள்ள பொறிமுறையாளர்களினதும் மேற்பார்வையாளர்களினதும் மற்றும் காமையாளர்களினதும் தொழில்நுட்ப அறிவைப் புதுப்பிப்பதற்காக மேலதிக பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துவதற்காக பயிற்சியாளரின் உள்ளெடுப்பு 12 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளில் போதியளவு அனுபவம் அவசியமாகும்.

1.4 கணிஷ்ட இயந்திர திருத்துனர்களுக்கான பயிற்சித் திட்டம்

நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிறுவனங்களில் தொழில்புரியும் கனிஷ்ட பொறிமுறையாளர்களின் அறிவையும் பயில்திறன்களையும் புதுப்பிப்பதற்காக இப்பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு இரண்டிலிருந்து ஐந்து வருடங்கள் வரையிலான அனுபவம் அவசியமாகும். தமது ஊழியர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சிநெறிகளுக்கு தொழில்வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி பல பயிற்சி நெறிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நீரியல் மற்றும் பொறிநுட்பவியல் போன்ற துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் உயர்ந்த கிராக்கியைக் கொண்டுள்ளதுடன் சிலவேளை இத்துறைகள் மீது மேலதிக பாடநெறிகள் நடத்தப்படல் வேண்டும்.

சிரேஷ்ட இயந்திர திருத்துனர்களுக்கான பயிற்சித் திட்டம்

சிரேஷ்ட இயந்திர திருத்துனர்களின் தொழில்நுட்ப அறிவையும் பயில்திறனையும் புதுப்பிப்பதற்காகவும் தவறுகளை கண்டறிவதிலும் சீரமைத்தலிலும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்காகவும் இந்த உயர் மட்ட பயிற்சிப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறிமுறையாளர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கெடுப்பதற்கு தகுதியைக் கொண்டுள்ளார்கள். தமது பொறிமுறையாளர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து, ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நெறிக்கு தொழில் வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி நெறி 6 வேறுபட்ட துறைகளைக் கொண்டுள்ளது. நீரியல்கள், மற்றும் இயக்கத்திரனியல் போன்ற இந்த துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் மிகவும் உயர்வான கிராக்கியைக் கொண்டுள்ளன. எனவே, சிலவேளைகளில் இத் துறைகளில் மேலதிக பாடநெறிகள் நடத்தப்படவேண்டியுள்ளன.





மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சித் திட்டம்

நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள வேலைத்தள மேற்பார்வையாளர்களின் அறிவை உயர்த்துவதற்காக மேற்பார்வை பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள மேற்பார்வையாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.


பொறியியலாளர்கள் / முகாமையாளர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள்

நிர்மாண இயந்திர சாதனங்களின் பயன்படுத்தலிலும் பராமரிப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள பொறியியலாளர்கள், வேலைத்தள முகாமையாளர்கள் மற்றும் கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோரின் அறிவை மேம்படுத்துவதற்காக இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிர்மாண இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள சிவில் பொறியியலாளர்களுக்கும், கருத்திட்ட முகாமையாளர்களுக்கும் தொழில்நுட்ப அறிவை நிருமாண இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி நெறி வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறியியலாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

நிர்மாண இயந்திர சாதனங்களைப் பராமரித்தல் பணிகளில் ஈடுபட்டுள்ள மின் எந்திரவியல் பொறியியலாளர்களுக்கும், முதல் வரிசை முகாமையாளர்களுக்கும் நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பு மீதான பயிற்சி நெறி தொழில்நுட்ப அறிவை வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ளவர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.





1.5 **உதவிப் பதவியணியினருக்கான பயிற்சித் திட்டங்கள்**

வழமையாக நிர்மாணக் கைத்தொழிலுக்காகப் பணியாற்றும் பெருமளவு களஞ்சிய/விநியோக/கருத்திட்டப் பணியணியினர் தமது சம்பந்தப்பட்ட துறைகளில் முறைமையான பயிற்சியை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை. இது பலதரப்பட்ட தொழிற்பாட்டுப் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்று இயந்திர சாதனப் பழுதுபார்த்தல் நிறுவனங்களின் தடையற்ற தொழிற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கின்றன. இப்பயிற்சி தேவையைச் சமாளிப்பதற்கு இந்த பயிற்சித் திட்டம் விருத்தி செய்யப்பட்டது.

1.6 **கட்டிடச் சேவைகள் பொறியியல் பயிற்சித் திட்டங்கள்**

கட்டிடச் சேவைகள் பொறியியல் துறையில் ஈடுபட்டுள்ள பொறியலாளர்களுக்கும் கட்டிடக் கலைஞர்களுக்கும் பெருமளவு திட்டங்களை CETRAC நடத்தியது.

வர்த்தகக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு அவசியமான இந்த கட்டிட சேவைகளை உள்ளடக்குவதற்காக ஒரு சில பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தீ பாதுகாப்பு முறைமைகள், மின்சார முறைமைகள், காற்றுச்சீராக்கல், காற்றோட்ட முறைமைகள், நீர் விநியோக, வடிகாலமைப்பு முறைமைகள் என்பனவே அவையாகும்.

1.7 வாடிக்கையாளர் தேவைக்கேற்ற பயிற்சித் திட்டங்கள்

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் ஈட்டப்பட்ட அனுபவத்துடன் நாட்டில் மாற்றமடைந்து வரும் கேள்வியை பூர்த்திசெய்வதற்காக வாடிக்கையாளர்களுக்கான பயிற்சி செயற்றிட்டங்களை இனம் கண்டு விருத்தி செய்ததினூடாக பயிற்சியில் பலதரப்பட்டதும், குறிப்பானதுமான கேள்விகளை CETRAC இனால் வெற்றிகரமாக ஈடுசெய்வதற்கு இயலுமாகியது.

2020 ஆம் ஆண்டில் CETRAC இன் செயலாற்றல் வருமாறு

அட்டவணை 1 : 2020 ஆம் ஆண்டில் CETRAC இன் செயலாற்றல்

	பயிற்சி பாடநெறிகள்	பதிவுசெய்யப்படடோர்		ளியேரியோர்	
		பாடநெறி எண்ணிக்கை	பங்குபற்றியோ எண்ணிக்கை	பாடநெறி எண்ணிக்கை	பங்குபற்றியோர் எண்ணிக்கை
01	பாடசாலை கல்வியை முடித்தவர்கள் (மட்டம் I) கட்டுமான உபகரண மெக்கானிக் பாடநெறி (CEM)	2	120	2	125
02	இன் கட்டுமான பராமரிப்பு தொழில்நுட்ப டிப்ளோமா (NVQ 5)	1	30	1	27
	பயிற்சி பாடநெறிகள்	இலக்கு வெளியீடு		உண்மையான வெளியீடு	
		பாடநெறி எண்ணிக்கை	பங்குபற்றியோ எண்ணிக்கை	பாடநெறி ாண்ணிக்கை	பங்குபற்றியோர் எண்ணிக்கை
03	கனிஷ்ட இயந்திர திருத்துனர் (மட்டம் II)				
	ஹைட்ராலிக் முறைமையின் பராமரிப்பு - 20M22	1	15	1	07
	நீர் குளாய்கள் மற்றும் கம்ப்ரசர்களின் பராமரிப்பு - 20WPC	1	15	1	19
04	துணை பதவியணியினர்				
	துணை பதவியணியினருக்கான களஞ்சிய பராமரிப்பு, விநியோக சங்கிலி மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் குறித்த அடிப்படை பாடநெறி	1	10	1	38
	களஞ்சிய பராமரிப்பு, விநியோக சங்கிலி மற்றும் களஞ்சிய முகாமைத்துவம் குறித்த உயர்தர சான்றிதழ் பாடநெறி	1	10	1	24
	நிறுவனத்தின் சிறு ஊழியர்களுக்கான கடமைகள் விருந்தோம்பல் மற்றும் நெறிமுறை உறவுகள் பற்றிய ஒரு நாள் செயலமர்வு	2	40	1	54
	நிறுவனமொன்றில் தர முகாமைத்துவ முறை எண்ணக்கருக்களை பயன்படுத்தல்	1	25	1	15
05	விருப்பத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள் (CET)				
	∴போர்க்லி∴ப்ட் இயக்குநர் பயிற்சி (மூன்று நாட்கள்)	1	15	1	3
	∴போர்க்லி∴ப்ட் இயக்குநர் பயிற்சி (ஐந்து நாட்கள்)	1	25	2	6
	தொடர்பாடல் கோபுர ரிக்கர் மற்றும் பொதுவான ரிக்கர்	1	25	1	6
06	விருப்பத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள் (BSE)				
	செயற்பாடுடைய மற்றும் செயலற்ற தீ பாதுகாப்பு அமைப்புகள்	1	20	1	25
	A/C அமைப்புகள் மற்றும் கட்டிடங்களுக்கான விண்ணப்பம்	1	20	1	36
	உயரமான கட்டிடங்களுக்கான பிளம்பிங் அமைப்புகள்	1	20	1	44
	கழிவு நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு, அகற்றும் வளங்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைப்புகள்	1	15	1	11
	நுழைவு கட்டுப்பாட்டு அமைப்புகள்	1	20	1	25
	ஸ்பிலிட் டைப் ஏ∴சி யூனிட்கள் பழுதுபார்த்துப் பராமரித்தல் குறித்த பரீட்சார்த்த பயிற்சித் திட்டம்	1	25	1	12
	மழைநீர் சேகரிப்பு	1	25	1	20
	துணைக்கருவிகளை தூக்குவதற்கான பாதுகாப்பான பயன்பாடு	1	40	1	54
	லி∴ப்ட் மற்றும் எஸ்கலேட்டர்களின் பராமரிப்பு	1	25	1	21
07	செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள்				
	பணியாளர்களின் தேர்வு மற்றும் பயிற்சி தேவைகளை கண்டறிதல் - ஒரு நாள் செயலமர்வு	1	50	1	22
	அடிப்படை கணினி நிரல்	1	100	1	32
	பாதுகாப்பான அறிவியல் மற்றும் பொருளாதாரம் குறித்த ஒரு நாள் செயலமர்வு	1	50	1	32
	பாதுகாப்பான, அறிவியல் சார்ந்த மற்றும் சிக்கனமாக வாகனமோட்டுதல்	1	100	2	140
	ஓட்டுநர் பயிற்சி குறித்த ஒரு நாள் செயலமர்வு	1	100	1	87
	ஓட்டுநர் பயிற்சி	1	80	1	36
	சாலைகளின் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் பராமரிப்பு	1	100	1	100
	மொத்தம்	29	1135	29	1021

2020 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருமானம்

தொழில் வகுதி	வருமானம் (ரூபா மில்லியன்)
பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள்	9.523
வேலைத்தள பழுதுபார்ப்புகள் மற்றும் ஏனைய வேலைத்தள பணிகள்	1.638
வசதிகளை வாடகைக்கு விடுதல்	1.938
மொத்தம்	**13.129**

கைத்தொழில் பயிற்சிப் பிரிவு

பயிற்றப்பட்ட மனித வளத்தின் கிடைப்புத்தன்மையை நிச்சயப்படுத்துவதன் மூலம் நிர்மாணத்துறை பங்குதாரர்களின் கொள்திறன்களை கட்டியெழுப்புவது பயிற்சிப் பிரிவின் முக்கிய குறிக்கோளாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் நிர்மாணத்துறையின் நிலைபேறான வளர்ச்சியின் இயங்கு விசையாக செயற்பட்டு ஒப்புநோக்க முடியாத அளவு வளரச்சி வீதத்தை அது கண்டுள்ளது.

நிர்மாணத்துறையில் திறனுள்ள தொழிலாளர்களின் பற்றாக்குறையானது பாரியளவில் வளர்ந்துவரும் இத்துறையில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

கைத்தொழில் பயிற்சிப் நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள வேலை படையினரின் இயலளவை கட்டியெழுப்பவதனை நிறைவேற்றும் பொருட்டு நாட்டின் மனித வளத் தேவையினை கட்டியெழுப்புவதில் தன்னை அர்ப்பணித்துள்ளது.

2020 இல் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

❖ நிர்மாணத்துறையில் திறன்கள் விருத்தி (5000 கைவினைஞர் நிகழ்ச்சித்திட்டம்)



மேசன், தச்சன், டைல் பதியுனர் மற்றும் குழாய் பொருத்துநர் போன்ற நிர்மாணக் கைத்தொழிற்துறையில் தற்போது கைவினைமிக்க திறனுள்ள தொழிலாளர்களின் பற்றாக்குறை நிலவுகின்றது. இது நிர்மாணத்துறையில் பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. இது நிர்மாணப் பணிகளை உரிய நேரத்தில் நிறைவுசெய்வதிலும் உயர் தரத்தில் வேலைகளை முடிப்பதிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இத்தகைய நிலமை நிர்மாணக் கைத்தொழில் துறையில் குறுகியகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு தூண்டியுள்ளது. இது நிர்மாணக் கைத்தொழில் துறையில் நிலவும் கைவினைஞர்களின் பற்றாக்குறைக்கும் தீர்வாக உள்ளது.

எனவே தற்போது பிரச்சினையாக உள்ள நிர்மாணத்துறை கைவினைஞர்களின் பற்றாக்குறைக்கு குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதில் CIDA நிறுவனம் முக்கிய பங்காற்றுகின்றது. அது NAITA, NCASL மற்றும் MCASL நிறுவனங்களுடன் இணைந்து அதற்கான ஏற்பாடுகளை செய்துவருகின்றது.

எனவே மேசன், தச்சன், டைல், இரும்பு வளைத்தல் மற்றும் மின்னியல் போன்று துறைகளில் ஏறத்தாழ 5000 சிறந்த கைவினைஞர்களை உருவாக்கும் பொருட்டு அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு அவர்களது அன்றாட தேவைகளுக்காக ஒரு மாதத்திற்கு ரூபா 10000.00 வீதம் மூன்று மாதங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. அத்தோடு நிர்மாணத்துறை கைவினைஞர்களுக்கு சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் இளைஞர்களை நிர்மாணத்துறையின் பால் கவரும் பொருட்டும் சுய தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக உபகரணப் பொதி வழங்கப்படுகின்றது.

❖ஒப்பந்த மற்றும் பெறுகை முகாமைத்துவம் பற்றிய திப்ளோமா பாடநெறி

அரசாங்க மற்றும் தனியார் துறையில் பெறுகை முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்தம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை தரத்திலுள்ள நபர்களது முகாமைத்துவ அறிவையும் திறன்களையும் நாளதுவரைப்படுத்திக்கொள்ள "பெறுகை முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகள் தொடர்பான 40 வாரங்கள் கொண்ட பாடநெறி" ஒவ்வொரு வருடமும் CIDA நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. 2020 ஆம் ஆண்டுக்கான பாடநெறி 2020 பெப்ரவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த 39 பேர் இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்டனர்.

❖ஒப்பந்த முகாமைத்துவம் பற்றிய சான்றிதழ் பாடநெறி

சிறிய மற்றும் நடுத்தர மட்டத்திலான ஒப்பந்தகாரர்களின் முகாமைத்துவ அறிவையும் திறன்களையும் அதிகரிப்பதற்காக "ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி" இனை ஒவ்வொரு வருடமும் பயிற்சிப் பிரிவு ஏற்பாடு செய்து வருகின்றது. இந்த பயிற்சித் திட்டம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படகின்றது. 2020 இல் ஐந்து பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன் ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பில் 209 ஒப்பந்தகாரர்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களது ஒப்பந்த முகாமைத்துவ மற்றும் நிர்வாக அறிவாற்றல் மேம்படுத்தப்பட்டது.

❖ நிர்மாணக் கைத்தொழில் பாதுகாப்பும் தொழில்சார் சுகாதாரமும் (CSOH)

நிர்மாண தொழிலின் இறுதி பெறுபேறான தரம் மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்காக இலங்கையின் நிர்மாணக் கைத்தொழில் துறையில் படிப்படியாக நவீன மற்றும் சிக்கலான நிர்மாண தொழில் நுட்பங்கள் மற்றும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. வேலைத்தளங்களில் மனிதவள மற்றும் ஏனைய வளங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்காக நிர்மாண பாதுகாப்பும் தொழில்சார் சுகாதாரமும் தொடர்புற்ற விடயங்கள் வேலைத் தளங்களில் மேம்படுத்தப்பட வேண்டுமென உணரப்பட்டுள்ளது.

CIDA தொழில் திணைக்களத்தின் தொழில்சார் சுகாதார பிரிவுடன் இணைந்து கீழ் குறிப்பிடப்படும் தர நிலைகளில் பயிற்சி திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

- **நிர்மாணக் கைத்தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார திப்ளோமா பாடநெறி (DS&OH):**

வேலை தளத்தில் சிறந்த சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நடைமுறைகளை அமுல்படுத்துதல் தொடர்பில் முறையான அறிவையும் திறன்களையும் வழங்குவதற்காக மேற்பார்வை மட்டத்திலுள்ள ஆட்களை இலக்குவைத்து இந்த 52 வாரகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் வாரத்திற்கு இரண்டு நாட்கள் வீதம் நடாத்தப்பட்டது. 2020 இல் 23 பேர் இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றினர்.

- **நிர்மாணக் கைத்தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழ் பாடநெறி (CS&OH):**

இருபத்தி நான்கு வாரகால பயிற்சி நிகழ்ச்சித்திட்டமான நிர்மாணக் கைத்தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழ் பாடநெறியினை ஒவ்வொரு வாரமும் ஒரு நாள் வீதம் நடத்துவதற்கு பயிற்சி பிரிவு இதனை வடிவமைத்துள்ளது. 29 பேர் இப் பாடநெறிகளில் பங்குபற்றினர்.

❖ நிர்மாண கைவினைஞரின் பதிவு மற்றும் கைவினை அடையாள அட்டைகளை வழங்குதல்

2014 இன் 33 ஆம் இலக்க CIDA சட்டத்தின் படி, அனைத்து நிர்மான கைவினைஞர்களும் (மேசன், தச்சர்கள் மற்றும் பிளம்பர்ஸ் போன்றோர்) கைவினை அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும். அவர்களின் திறமை மட்டத்தை மேம்படுத்தி தரமுயர்த்துவதற்கும் நிர்மாணத் துறையில் அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குவதற்கும் "திறமையான நபர்களை" பதிவு செய்வது தொடர்பான விதிகள் இந்தச் சட்டத்தில் உள்ளன. பதிவுகள் பின்வரும் வகைகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

I. திறன்கொண்ட நிர்மாண கைவினைஞர்
II. நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிர்மாண வேலைத்தள மேற்பார்வையாளர்கள், மத்தியதர தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தொழிலாளர்கள்

கட்டுமான கைவினைஞர் (மேசன்), எலக்ட்ரீஷியன், தச்சர் (கட்டிடம்), பிளம்பர், தச்சர் (தளபாடங்கள்), பார் பெண்டர், டைல் லேயர் வெல்டர், வெல்டர், பெயிண்டர் (கட்டிடங்கள்), அலுமினியம் ∴பேப்ரிகேட்டர் மற்றும் ஏனையோர் போன்ற 11 வகைகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கைவினைஞர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

வீடமைப்புத் திட்டமிடல் மற்றும் கட்டிடவாக்க நிலையம் (CHPB)

வீடமைப்புத் திட்டமிடல் மற்றும் கட்டிட நிலையம் (சிஎச்பிபி) ஒரு ISO 9001: 2015 சான்றளிக்கப்பட்ட நிறுவனமாகும். மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவு இலக்கம் POI / 054 கொண்ட சிடா இன் நிர்வாக அதிகார வரம்பிற்குள் வரும் பல்லின ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனமாகும். சி.எச்.பி.பி இல. 33, பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தமுல்லை இல் அமைந்துள்ளது. தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களின் தொழில் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட பாடநெறிகளை நடத்துவதில் CHPB உறுதியாக செயற்படுகின்றது. இந்த தொழில்நுட்ப அமர்வுகளுக்கு கிடைத்த பெரும் வரவேற்பு மிகவும் பெருமதிமிக்க பாடநெறிகளை நடத்துவதில் CHPB இன் நிபுணத்துவத்திற்கு கிடைத்த ஒரு சான்றாக காணப்படுகின்றது.

❖ **CHPB பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**





நிர்மாண மற்றும் அளவு கணக்கெடுப்பு துறைகளுக்கான இடைவெளி நிரப்புதல் பயிற்சி திட்டங்களை CHPB வழங்குகிறது. எங்கள் முக்கிய இலக்குக் குழுவில் நிர்வாகத் துறையில் ஆர்வமுள்ள நிர்வாகிகள், பொறியாளர்கள், ஆர்வலர்கள், கட்டுமான முகாமையாளர்கள் மற்றும் பாடசாலையை விட்டு வெளியோர்கள் உள்ளனர்.

நில அலங்கார அபிவிருத்தி உதவியாளர் (என்.வி.கியூ 4) பாடநெறியானது பாடசாலையை விட்டு வெளியோர்களிற்கும், இயற்கை துறைகளில் மேற்பார்வையாளராக நுழைய விரும்புகின்ற இளம் ஆர்வலர்களுக்குமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

உள்துறை வடிவமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் கைத்தொழில் மற்றும் உள்ளக அலங்காரம் (என்.வி.கியூ 4) என பாடசாலையை விட்டு வெளியோர்களிற்காக இரண்டு பிரிவுகளில் நடத்தப்படுவதுடன் இன்டீரியர் டிசைன் டிப்ளோமா பாடநெறி முக்கியமாக உள்துறை வடிவமைப்பு ஊழியர்களை இலக்காகக் கொண்டுள்ளது.

NVQ படிப்புகள் மற்றும் டிப்ளோமா படிப்புகள் என்ற பிரிவுகளின் கீழ் அளவு கணக்கெடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. அனுபவம் வாய்ந்த கட்டுமானப் பணிகள் மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள், உதவி அளவு கணக்கெடுப்பாளர்கள் மற்றும் தகுதி வாய்ந்த ஆர்வலர்களை இலக்காகக் கொண்டு அளவு கணக்கெடுப்பு டிப்ளோமா பாடநெறி நடாத்தப்படுகின்றது. அளவு கணக்கெடுப்புக்கான சான்றிதழ் (என்.வி.கியூ 4) மற்றும் அளவு அளவீட்டுக்கான தேசிய டிப்ளோமா (என்.வி.கியூ 5) படிப்புகள் தேசிய தொழில் தகுதி (என்.வி.கியூ) பாடத்திட்டத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.

❖ **அளவீட்டு கணக்கெடுப்பாளர் துறைக்கான பகுதிநேர பாடநெறிகள்**

- அளவு கணக்கெடுப்பு உதவி சான்றிதழ் - 21 பங்கேற்பாளர்களுடன் ஒரு நிகழ்ச்சித்திட்டம்.

மேலேயுள்ள நிகழ்ச்சித்திட்டம் 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. இந்த அளவீட்டு கணக்கெடுப்பு பாடநெறிகள் அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

❖ **நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான கணினி பாடநெறிகள்**

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான மூன்று வகையான கணினி பாடநெறிகள் 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.

- 42 பங்கேற்பாளர்களுடன் MS செயற்திட்ட பாடநெறியின் 02 நிகழ்ச்சித்திட்டங்கள்.
- 17 பங்கேற்பாளர்களுடன் ஆட்டோ கேட் பாடநெறியின் 02 நிகழ்ச்சித்திட்டங்கள்.

CHPB 2020 ஆம் ஆண்டிற்கான குறுகிய கால பயிற்சி திட்டங்களையும் நடத்தியது,

- QS புலத்திற்கான MEP அளவு கணக்கெடுப்பு
  31 பங்கேற்பாளர்களுடன் 01 நிகழ்ச்சிகள்

- QS புலத்திற்கான BOQ மற்றும் வீகிதப் பகுப்பாய்வு விலை நிர்ணயம்
  13 பங்கேற்பாளர்களுடன் 01 நிகழ்ச்சி

- சிவில் இன்ஜினியரிங் துறையில் உள்ள ஊழியர்களுக்கான மொத்த ஸ்டேஷன் பாடநெறி
  13 பங்கேற்பாளர்கள் கொண்ட 01 நிகழ்ச்சி

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு செயற்திட்டங்களில் பணிபுரியும் நிர்மாணக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள பொறியியலாளர்கள், செயற்திட்ட முகாமையாளர்கள் மற்றும் திட்டமிடுபவர்களுக்கு இது உதவியாக இருந்தது.

ஊழியர்களின் போட்டித்திறன் மேம்பாட்டிற்கான மேலதிக பயிற்சி பாடநெறிகள்

நிர்மாணத் தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள், பொறியாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழில்முனைவோரின் திறனை மேம்படுத்துவதற்காக மேலதிக பயிற்சி வகுப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த பாடநெறிகளைப் பின்பற்றுவதற்குத் தொழில் அனுபவம் மற்றும் தேவையான தகுதிகள் அவசியமாக உள்ளது.

❖ **தனிப்பட்ட தேவைக்காக வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் / குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

நிர்மாண நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட பயிற்சித் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பிரத்தியேகமான பயிற்சி திட்டங்களை வெற்றிகரமாக வடிவமைத்து வழங்க CHPB இற்கு முடிந்திருந்தது.

- பிளம்பிங் நிகழ்ச்சித்திட்டம் - NAITA (25 பங்கேற்பாளர்களுடன்)

- AC நிகழ்ச்சித்திட்டம் - NAITA (24 பங்கேற்பாளர்களுடன்)

- கைத்தொழில் பிளம்பிங் நிகழ்ச்சித்திடடம் ஆதனங்கள் இன்ஜினியரிங் (5 பங்கேற்பாளர்களுடன்)

கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

நிர்மாணத் துறை முழுவதிலும் பரவுண்டு பல்வேறு வேலைவாய்ப்பு பிரிவுகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கு வெவ்வேறுபட்ட தலைப்புகளில் அறிவு மற்றும் நடைமுறை அனுபவங்களை வழங்குவதற்காக மாதந்தோறும் கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. விரிவுரைகள், பதாகைகள், துண்டுப்பிரசுர நடைமுறை, விவாதங்கள் மற்றும் கேள்வி பதில் அமர்வுகளை நடத்துவதன் மூலம் அறிவை பரிமாற்றும் வழிமுறைகள் இடம்பெறுகின்றன.

CHPB 2020 ஆம் ஆண்டில் 512 பங்குபற்றுனர்களுடன் 13 கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் நடாத்தியது. CHPB இன் வருமானம் கோவிட் 19 தாக்கம் காரணமாக பாதிக்கப்படாதிருக்கும் வகையில் புதிய தந்துரோபாயமான நிகழ்நிலை வழியின் மூலம் நாம் எமது கருத்தரங்குகளை ஒழுங்குசெய்திருந்தோம். அவ்வாறான கருத்தரங்குகள் கீழே காண்பிக்கின்றது.

- 23 பங்கேற்பாளர்களுடன் மின் தொழில்நுட்பம் (வதிவிட) (நிகழ்நிலை) பற்றிய கருத்தரங்குகள்.

- 23 பங்கேற்பாளர்களுடன் கட்டுமான வேலைத்தளத்தில் (நிகழ்நிலை) பாதுகாப்பு குறித்த கருத்தரங்கு.

- 34 பங்கேற்பாளர்களுடன் கட்டுமான ஒப்பந்தங்களை நிர்வகித்தல் (ஆன்லைன்) பற்றிய கருத்தரங்கு

- 24 பங்கேற்பாளர்களுடன் வணிக மற்றும் கைத்தொழில் காற்றுச் சீராக்கி முறைமையை நிறுவுதல் மற்றும் பராமரிப்பு (நிகழ்நிலை) பற்றிய சிறப்புப் பொறியியல் பயிற்சிக் கருத்தரங்கு

- 36 பங்கேற்பாளர்களுடன் உயர்தர மின்னியல் தொழில்நுட்பம் (கைத்தொழில்) (நிகழ்நிலை) பற்றிய கருத்தரங்கு
- பிளம்பிங் தொழில்நுட்பம் (நிகழ்நிலை) 35 பங்கேற்பாளர்கள்
- 23 பங்கேற்பாளர்களுடன் மின் தொழில்நுட்பம் (வதிவிட) (நிகழ்நிலை) பற்றிய கருத்தரங்குகள்.
- 23 பங்கேற்பாளர்களுடன் நிலைபேறான கட்டிடங்கள் மற்றும் ஆட்டோமேஷன் (நிகழ்நிலை) பற்றிய கருத்தரங்கு

2020 இல் CHPB இன் சுருக்கமான செயன்முன்னேற்றத்தைக் கீழே இணைக்கப்பட்ட அட்டவணை 01 குறிப்பிடுகின்றது.

அட்டவணை 01: CHPB இன் செயல்முன்னேற்ற பொழிப்பு.

பொழிப்பு						
நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)						
2020 திசெம்பர் வரையான செயன்முன்னேற்றம்						
பிரிவு	வருடாந்த இலக்குகள்		செயன் முன்னேற்றம் (திரண்ட)			
	பௌதீக	நிதிசார் ரூபா மில்.	பௌதீக	%	நிதிசார் ரூபா மில்.	%
வீடமைப்பு மற்றும் கட்டிடவாக்க நிலையம் (CHPB)	1,832	19.206	**709**	**39.77%**	**11.533**	**60.05%**

மனித வங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவு

மனித வளத் தேவைகள், இயலுமை அபிவிருத்தி, செயலாற்றல் மதிப்பீடு, வெகுமதி முகாமைத்துவம் மற்றும் சுகாதாரமானதும் பாதுகாப்பு மிக்கதுமான பணிச் சூழலை உறுதி செய்தல் ஆகியவை மனித வளம் மற்றும் நிர்வாகப் பிரிவின் முக்கிய செயல்பாடுகளாகும். செயல்பாட்டுப் பிரிவுகளுடன் இணைந்து, நிறுவனத்தின் மனிதவளத்திற்கான செயல்பாடுகளை செயல்படுத்துதல், நிர்மாணத் தொழிலை ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேம்படுத்துவதை உறுதி செய்யும் வருடாந்த அமுல்படுத்தல் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டத்திலுள்ள குறிக்கோள்களை அடைவதற்கு இப்பிரிவு செயற்படுகின்றது.

மனித வளத்தை உற்பத்தித்திறனாகவும் பயனுள்ள முறையிலும் நிர்வகித்தன் மூலம் தந்துரோபாய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைந்துகொள்ள CIDA க்கு முடிந்திருந்தது.

இப்பிரிவின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று, ஊழியர்கள் திருப்தி அடைதலைக் காண்பதாகும். இதன் மூலம் சேவைகளை திறம்பட வழங்குவதை உறுதி செய்ய முடியும்.

2020 இல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

- ஆட்சேர்ப்பு திட்டம் (SOR)

CIDA ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால்.2017.11.17 திகதிய டி.எம்.எஸ்/1520/வி-II ஆம் இலக்க கடிதத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு மற்றும் எஸ்.ஒ.ஆரைத் பின்பற்றி தேவையான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களுக்கான மறுசீரமைப்புக்கான மேலதிக முன்மொழிவு பணிப்பாளர் சபையின் ஒப்புதலுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் (DMS) ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு மற்றும் SOR ஆகியவற்றைப் பின்பற்றி தகுதியான ஊழியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

- CIDA ஊழியர்களின் இயலளவு கட்டியெழுப்புதல்

CIDA ஊழியர்களின் இயலளவை கட்டியெழுப்பும் நோக்குடன் 2020 ஆம் ஆண்டிற்கான பயிற்சி மற்றும் அபிவிருத்தி திட்டம் உருவாக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட உள்ளூர் பயிற்சித் திட்டங்களில் 128 அதிகாரிகள் பங்கேற்றனர்.
(அட்டவணை 01)

CIDA பதவியணியினர்களின் 2020 ஆம் ஆண்டிற்கான பயிற்சியளித்தல் பொழிப்பு அறிக்கை – அட்டவணை 01

தொடர் இல.	நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்	நிறுவனம்	பங்குபற்றியோர் எண்ணிக்கை
1	பொதுச் சொத்துக்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்	CIDA	68
2	நிர்மாண உபகரண மேற்பார்வை தொழில்நுட்பம் மீதான தேசிய திப்ளோமா	CETRAC	1
3	கூட்டிணைந்த திட்டத்தை உருவாக்குதல் செயலமர்வு	SLIDA	35
4	பிரதான செயலாற்றல் சுட்டிகளை (KPI) உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம்	CIDA	24
மொத்தம்			128

➢ CSR செயற்பாடுகள்

NAITA இல் தொழிற் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்படோருக்கு CIDA பயிற்சி வசதிகளை வழங்குகின்றது. 2020 ஆம் ஆண்டில் அவ்வாறு 16 பயிலுநனர்களிற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அ. வருமானம் ஈட்டல்

மனித வள மற்றும் நிர்வாகப் பிரிவு கீழே காண்பிக்கப்பட்டவாறு வருமானம் ஈட்டலுக்காக பங்களித்திருந்தது.

வருடாந்த வருமானம்

- கேட்போர் கூடம் மற்றும் மாநாட்டு மண்டபம் - ரூபா 1,527,285.00
- சுற்றுலா விடுதி - ரூபா 50,810.00

மொத்தம் - ரூபா 1,578,095.00

ஆ. பதவியணியினர் விபரங்கள்

2020 இல் காணப்பட்ட மொத்த நிரந்தர பதவியணியினர் எண்ணிக்கை 257 ஆகும்.

2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு **CIDA** பதவியணியினர் விபரங்கள் - அட்டவணை 02

பதிவி	சம்பளக் குறியீடு	அங்கீகரித்த எண்ணிக்கை	உள்ளபடியான எண்ணிக்கை	வெற்றிடம்
சிரேஷ்ட நிலை				
பணிப்பாளர் நாயகம்	HM 2-1	1	1	0
இயக்குனர்	HM 1-3	6	4	2
உதவி பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர்	MM 1-1	29	20	9
மொத்தம்		**36**	**25**	**11**
மூன்றாம் நிலை				
கனிஷ்ட முகாமையாளர்கள்	JM 1-2	71	46	25
மொத்தம்		**71**	**46**	**25**
இரண்டாம் நிலை				
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதவர்)	MA 1-2 (தொழில்நுட்பம் அல்லாதவர்)	80	66	14
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)	MA 2-2 (தொழில்நுட்பம்)	34	15	19
மொத்தம்		**114**	**81**	**33**
முதன்மை நிலை				
முதன்மை நிலை (திறமையானது)	PL-3 (திறமையானது)	80	54	26
முதன்மை நிலை (அரை திறன்)	PL-2 (அரை திறன்)	10	6	4
முதன்மை நிலை (திறமையற்றது)	PL-1 (திறமையற்றது)	37	30	7
மொத்தம்		**127**	**90**	**37**
பாதுகாப்பு பிரிவு				
பாதுகாப்பு அதிகாரி/கண்காணிப்பாளர்	MA 1-2 (திறமையற்றது)	9	5	4
பாதுகாவலர்	PL-1 (அரை திறன்)	33	10	23
மொத்தம்		**42**	**15**	**27**
கூட்டு மொத்தம்		**390**	**257**	**133**

குறிப்பு: தனிப்பட்ட பதவிகள்
(பாதுகாப்பு ஊழியர்கள்)

இ. ஓய்வு பெற்ற, பதவி இராஜினாமா செய்த மற்றும் 01.01.2020 முதல் 31.12.2020 வரை ஒப்பந்த காலம் முடிவடைந்த ஊழியர்களின் விவரங்கள். **(அட்டவணை -03)**


- ஓய்வு - 12
- ஒப்பந்த காலம் முடிவு - 04
- இராஜினாமா - 12

மொத்தம் - 28

ஓய்வு பெற்ற/ ஒப்பந்தக் காலம் முடிவடைந்த / இராஜினாமா செய்த ஊழியர்கள் அறிக்கை - ஆண்டு – 2020 அட்டவணை -03

தொடர் இல.	ஊழியர் குறியீடு	ஊழியர் பெயர்	பதவி	சம்பளக் குறியீடு	தரம்
1	919	டபிள்யூ எஸ் சில்வா	பணிப்பாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்)	HM 1-3	-
2	19	கே இளங்கரத்ன	உதவிப் பணிப்பாளர் (சி.இ.ஒ.ரி.)	MM 1-1	II
3	439	கே.ஏ.சி.கே.கே.குலதிலக	பிரதிப் பணிப்பாளர் (எல்.டி)	MM 1-1	I
4	549	கே.எம். ஸ்ரீயானி மங்கலிகா	உதவிப் பணிப்பாளர் (நிதி)	MM 1-1	II
5	485	கே பத்மசிறி	சிரேஷ்ட காவலர்	MA 1-2 (தொழில்நுட்பம் அல்லாதவர்)	II
6	266	எச் எம் பி ஹேரத்	முகாமைத்துவ உதவியாளர்	MA 1-2 (தொழில்நுட்பம் அல்லாதவர்)	I
7	190	பீ. கல்ஹேன	முகாமைத்துவ உதவியாளர்	MA 1-2 (தொழில்நுட்பம் அல்லாதவர்)	I
8	250	ஜி ராஜபக்ஷ	நடுவர்	PL-3 (திறமையானது)	II
9	565	டி எம் சமரசிங்க	நடுவர்	PL-3 (திறமையானது)	II
10	253	ஈ ஏ எஸ் குமார	நடுவர்	PL-3 (திறமையானது)	I
11	45	ஜி ஏ டபிள்யூ பி உபேவர்தன	நடுவர்	PL-3 (திறமையானது)	I
12	254	ஏ.ஏ பிரேமரத்ன	நடுவர்	PL-3 (திறமையானது)	II
ஒப்பந்தக் காலம் முடிவடைந்த					
1	975	கே.எச் காந்திலதா	DCO(ஒப்பந்தம்)	JM 1-2	II
2	976	எல்.டி.எச்.இஷங்கா மதுமாலி	DCO(ஒப்பந்தம்)	JM 1-2	II
3	983	பி.எஸ்.பெர்னாண்டோ புள்ளே	உதவியாளர் - ஒப்பந்தம்	PL-1 (திறமையற்றது)	III
4	984	ஆர்.பி.பி.லசந்தி திலகரத்ன	உதவியாளர் - ஒப்பந்தம்	PL-1 (திறமையற்றது)	III
இராஜினாமா செய்த ஊழியர்கள்					
1	999	ஏ.ஏ.சி.பி.தர்மரத்ன	தொழில்நுட்ப முதன்மை அதிகாரி	JM 1-2	II
2	909	வி இளங்கோ	உதவி பணிப்பாளர் (ஆரா.அபி)	MM 1-1	II
3	995	ஜி.சி.ஜி.வெல்லப்பிலி	உதவி பணிப்பாளர் (தொழில்நுட்ப கணக்காய்வு)	MM 1-1	II
4	926	எம்.எஸ்.ஆர் பெரேரா	பொறியல் உதவியாளர்	JM 1-2	II
5	969	டபிள்யூ.டபிள்யூ.சதுனி வாசனா	முகாமைத்துவ உதவியாளர்	MA 1-2	III
6	976	எஸ்.பாக்யா ராஜபக்ஷ	முகாமைத்துவ உதவியாளர்	MA 1-2	III
7	307	எம்.பப்பாதிஸ்ஸ	அலுவலக உதவியாளர்	PL-1 (திறமையற்றது)	III
8	308	கே.பி.விமலசேன	நடுவர்	PL-3 (திறமையானது)	II
9	602	ஏ சுனில் சாந்த	அலுவலக உதவியாளர்	PL-1 (திறமையற்றது)	II
10	985	ஜே.ஏ.நிஷானி லக்மாலி	உதவியாளர் - ஒப்பந்தம்	PL-1 (திறமையற்றது)	III
11	805	ஜி.சதுரங்க	அலுவலக உதவியாளர்	PL-1 (திறமையற்றது)	III
12	938	எஸ்.ஜெசித்	தொழில்நுட்ப உதவியாளர்	MA 2-2(தொழில்நுட்பம்)	III

நிதிப் பிரிவு



நிதிப் பிரிவின் முக்கிய செயல்பாடுகளில் மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகள், வருடாந்த வரவு செலவுத் திட்டம் மற்றும் பணியாளர்கள் மற்றும் அரசாங்க வரிகளை உள்ளடக்கிய பிற கொடுப்பனவுகள், அரசாங்க விடயங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் பிற முகாமைத்துவ தகவல் அறிக்கைகள் ஆகியவை அடங்கும்.

நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவு, அதிகாரசபையின் பல்வேறு பிரிவுகளுக்கு தேவையான நிதி வசதிகளை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ளது. அதன்படி, வரவு செலவுத் திட்டம் மற்றும் வருடாந்த செயல் திட்டங்களுக்கு இணங்க அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி வசதிகளை வழங்கும் பொறுப்பை நிதிப் பிரிவு கொண்டுள்ளது. நிதி அறிக்கைகள் மற்றும் செயல்முன்னேற்ற அறிக்கைகளை அவ்வப்போது வழங்குதல் உள்ளிட்ட நிதி அறிக்கைகளின் பராமரிப்பும் நிதிப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இது நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் முதலீட்டு முகாமைத்துவ நடவடிக்கைகள் உட்பட அதன் நிதிகளின் பாதுகாவலராகவும் செயல்படுகிறது.

2019 ஆம் ஆண்டில் அரசாங்க மானியமாக பெறப்பட்ட ரூபா 100.47 மில்லியன் உட்பட மொத்த வருமானமான ரூபா 707.68 மில்லியன் மற்றும் மொத்த சொத்துக்கள் ரூபா 1,600 மில்லியன் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பதிவுகளை வைத்திருப்பது நிதி பிரிவின் மற்றொரு முக்கியமான பொறுப்பாகும். நிதிப் பிரிவு, அதிகார சபையின் ஒவ்வொரு பிரிவின் செயல்திறனையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளுக்கு நிதி வசதிகளை வழங்குகின்றது.

இப்பிரிவின் நோக்கங்கள்

உந்துதல் பரப்பு. 1. திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

- CIDA இன் நிதி ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்த ஒவ்வொரு பிரிவின் வருமானம் மற்றும் செலவு இலக்குகளை கண்காணித்தல்.
- காசோட்டம் மற்றும் இலாபத்தன்மையை தீர்மானித்தல்.
- இருப்புக்கள் மற்றும் மூலதனச் சொத்துகளின் முகாமைத்துவம்

உந்துதல் பரப்பு - 2. ஒழுங்குமுறைப்படுத்தல் செயல்பாடுகள்

- வணிகர்களுக்கு விரைவான சேவையை வழங்குவதற்கும், ஊழலை ஒழிப்பதற்காக ஆர்வமுள்ள தரப்பினர்களிற்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் உறுதியான நிதி ஒழுங்குமுறை அமைப்பை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.

- நிறுவன வளங்களின் பயன்பாட்டை மேம்படுத்தும் வகையில் நேர்மை மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவித்தலை உறுதிப்படுத்தும் அதேவேளை சரியான நேரத்தில் பதிலளிக்கக்கூடிய மற்றும் துல்லியமான நிதி முகாமைத்துவ முறைமையை உருவாக்குதல்.

உந்துதல் பரப்பு 3. நிறுவன இயலுமையை கட்டியெழுப்புதல்
(நிதி வளங்களின் அபிவிருத்தியும் முகாமைத்துவமும்)


- பெறப்பட்ட நிதியின் உச்ச பயன்பாடு.
- சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளுக்கு CIDA நிதியத்திலிருந்து நிதியைப் பெறுதல்.

சட்டத்தின்படி நிதிப் பிரிவின் நோக்கெல்லை

அதிகாரசபையின் நிதிக் கட்டுப்பாடு (CIDA சட்டத்தின் பகுதி IV இன் பிரிவு 25.)

- பாதீடு தயாரித்தல்.
- வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்.
- பணத்தினை முதலீடு செய்தல்

தற்போதைய பிரதேச அமைப்பு வரைபடம்



தற்போதைய பிராந்திய பதவியணி

புதவி	அங்கீகரித்த ஊழியர்கோப்பு	2021 நிலவரம்	2021 இல் வெற்றிடம்
பணிப்பாளர்	01	01	-
உதவிப் பணிப்பாளர்	02	00	02
கணக்கு உத்தியோகத்தர்	02	02	-
முகாமைத்துவ உதவியாளர்	14	13	01
அலுவலக உதவியாளர்	01	00	01

ISO செயல்முறை மற்றும் குறிக்கோள்

நிதித் திணைக்களமானது அதன் செயல்பாடுகளில் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு உறுதிபூண்டுள்ளதுடன் CIDA இல் CIDA இன் தரச் செயல்பாட்டின் ஒரு பகுதியாக அதன் QMS ஐ உருவாக்கியுள்ளது. எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்கும் சேவையின் மட்டம் மற்றும் தரத்தை தொடர்ந்து மேம்படுத்த முயற்சிக்கும் அதே வேளையில், உயர்தர தரம் வாய்ந்த மற்றும் வலுவான வாடிக்கையாளர் நோக்கிய சேவையை பராமரிப்பதில் நிதிப்பிரிவின் அர்ப்பணிப்பை இந்த தர கையேடு நிரூபிக்கிறது. எமது ஒட்டுமொத்த சேவை வழங்கும் செயல்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக தரம் உள்ளது. இந்த கையேட்டில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள எந்தவொரு செயல்முறையினதும் மாற்றங்கள் மற்றும் எமது பிரதான சேவை செயல்முறைகள் பிரிவின் ஆவணக் கட்டுப்பாட்டு நடைமுறையைப் பயன்படுத்தி கட்டுப்படுத்தப்படுகின்றன. நிதித் திணைக்களத்திலுள்ள QMS முறைமையின் கண்ணோட்டம் இந்த நடைமுறைகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

1. வருமானச் சேகரிப்பு மற்றும் கணக்கீட்டு செயன்முறை.
2. கொடுப்பனவு மற்றும் கணக்கீட்டுச் செயன்முறை.
3. இருப்புக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டுச் செயன்முறை.
4. வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் பாதீட்டுக் கட்டுப்பாட்டு செயல்முறை.
5. வங்கி கணக்கிணக்கம்


6. கடன்கொடுத்தோர் கணக்கிணக்கம்
7. கடன்பட்டோர் கணக்கிணக்கம்
8. மாதாந்த கணக்குகள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்.

இல	செயல்முறையின் பெயர்	குறிக்கோள்
1	வருமானச் சேகரிப்பு மற்றும் கணக்கீட்டு செயன்முறை (KP 04/ FIN/ 01)	முகாமைத்துவச் சபைக்கு மாதாந்த வருமான அறிக்கையை சமர்ப்பித்தல்.
2	கொடுப்பனவு மற்றும் கணக்கீட்டுச் செயன்முறை (KP 04/ FIN/ 02)	கணக்குப் பிரிவுக்கு பயன்பாட்டு சேவைப் பட்டியல்கள் கிடைத்தவுடன், ஒவ்வொரு பயன்பாட்டு சேவைப் பட்டியலிற்கும் 05 வேலை நாட்களுக்குள் காசோலைகளை வழங்குவதை உறுதிசெய்தல்.
3	இருப்புக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டுச் செயன்முறை. (KP 04/ FIN/ 03)	மெதுவாக நகரும் மற்றும் வேகமாக நகரும் இருப்பு மட்டங்களை பராமரித்தல்
4	வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் பாதீட்டுக் கட்டுப்பாட்டு செயல்முறை. (KP 04/ FIN/ 04)	நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் வருடாந்த பாதீட்டுக்கு ஒப்புதலைப் பெறுதல்.
5	வங்கி கணக்கிணக்கம் (SP 03/ FIN/ 01)	ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்குள் முடிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கத்தை அனுப்பிவைத்தல்.
6	கடன்கொடுத்தோர் கணக்கிணக்கம் (SP 03/ FIN/ 02)	அந்தந்த ஆண்டில் கடன்கொடுத்தோரில் 75% தொகையை தீர்த்தல்.
7	கடன்பட்டோர் கணக்கிணக்கம் (SP 03/ FIN/ 03)	அந்தந்த ஆண்டில் நிலுவையில் உள்ள 90% இனை சேகரித்தல்.
8	மாதாந்த கணக்குகள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல் (SP 03/ FIN/ 04)	பணிப்பாளர் சபைக் கூட்டத் திகதியின் ஒரு வாரத்திற்கு முன் மாதாந்த கணக்கு அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

பிரிவின் விதிமுறைகள்

- சரியான கொடுப்பனவு வவுச்சர்களுக்கான காசோலையை 3 வேலை நாட்களுக்குள் தயார் செய்வதை உறுதி செய்தல்.
- கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதிலை உரிய தேதியில் அனுப்புவதை உறுதி செய்தல்.
- உரிய தேதிக்கு முன் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
- கடிதங்களிற்க 7 நாட்களுக்குள் அல்லது கோரும் தேதிக்கு முன் பதிலளித்தல்.
- முதல் கடிதம் அனுப்பப்பட்ட 14 நாட்களுக்குப் பிறகு பதிலளிக்கப்படாத கடிதங்களுக்கு நினைவூட்டல்களை அனுப்புதல்.
- நிதி பிரிவின் விதிமுறைகளுக்கு எதிராக முறைப்பாடுகள் இன்மையை பராமரித்தல்.

நிதிப் பிரிவின் வெற்றிக்கான கட்டமைப்பு
ஒருங்கிணைந்த பெறுபேற்று அடிப்படையிலமைந்த முகாமைத்துவ கட்டமைப்பு.



நிதிப் பிரிவின் மூலோபாயத் திட்டத்தின் குறிக்கோள் பிரதான மூன்றெழுத்து மடிப்பைக் கொண்டுள்ளது.

ஒழுக்கம் = ஒழுங்குபடுத்தும் செயல்முறைகள்
லீன் முகாமை = மூலோபாய உற்பத்தித்திறனை அதிகரித்தல்
அபிவிருத்தி = புத்தாக்கத்தை ஊக்குவித்தல்

பிரிவின் தந்துரோபாயங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகள்

இல.	குறிக்கோள்கள்	தந்துரோபாயங்கள்	பிரதான செயற்பாடுகள் / நடவடிக்கைகள்
உந்துதல் பரப்பு 1: திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி			
1.1	CIDA இன் நிதி உறுதித்தன்மையை நிலைநிறுத்த ஒவ்வொரு பிரிவின் வருமானம் மற்றும் செலவு இலக்குகளை கண்காணித்தல்.	தரவு மற்றும் செயல்முறைகளை நியமப்படுத்துதல்.	நிலையான வார்ப்புருக்கள் மற்றும் தரவு சேகரிப்பின் ஒருங்கிணைந்த ஒற்றை முறை ஆகியவற்றை அறிமுகப்படுத்துதல். பொறுப்பளித்தல் - DD/AD(நிதி)
		CIDA இன் முதன்மை நோக்கங்களில் கவனம் செலுத்துதல்.	நிதித் திட்டம் மற்றும் பாதீட்டுக் கட்டுப்பாட்டை சமர்ப்பித்தல். பொறுப்பு - பணிப்பாளர் (நிதி)
1.2	திரவத்தன்மை மற்றும் இலாபத்தன்மையின் அளவை தீர்மானித்தல்.	மாதாந்த செயலாற்றலை மதிப்பிடுதல்	காசோட்டத்தை தயாரித்தல் பொறுப்பளித்தல் - DD/AD(நிதி)
1.3	இருப்பு மற்றும் மூலதனச் சொத்துகளின் முகாமைத்துவம்	பொருள் மெய்மையாய்வை மேற்கொள்ளல்	முக்கிய நிலையான சொத்துகள் பதிவேடு மற்றும் பிரிவு பதிவேடுகளை புதுப்பித்து பராமரித்தல் பொறுப்பளித்தல் - DD/AD(நிதி)
		சிறந்த களஞ்சிய முறைமையை பேணுதல்	உத்தம இருப்பு மட்டங்களை உருவாக்கி முகாமைத்துவம் செய்தல் பொறுப்பளித்தல் - DD/AD(நிதி)

பிரிவின் தந்துரோபாயங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகள்

இல.	குறிக்கோள்கள்	தந்துரோபாயங்கள்	பிரதான செயற்பாடுகள் / நடவடிக்கைகள்
உந்துதல் பரப்பு 2: ஒழுங்குபடுத்தல் தொழிற்பாடுகள்			
2.1	வணிகர்களுக்கு விரைவான சேவையை வழங்குவதற்கும், ஊழலை ஒழிப்பதற்காக ஆர்வமுள்ள தரப்புக்களிற்கு உத்தரவாதம் அளிப்பதற்கும் உறுதியான நிதி ஒழுங்குமுறையினை நிறுவிப் பராமரித்தல்.	இலங்கையின் நிதி ஒழுங்குமுறைகள் (FR), கொள்வனவு வழிகாட்டல், பொது முயற்சிகள் மற்றும் நிதி அமைச்சின் தொடர்புடைய சுற்றறிக்கைகளிற்கு அமைய வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வுடன் நிதிக் கட்டுப்பாட்டைப் பேணுதல். CIDA பணிப்பாளர் சபை தீர்மானங்கள் மற்றும் CIDA உள்ளக சுற்றறிக்கைகள்.	அனைத்துக் கொடுப்பனவுகள் மற்றும் வருமான சேகரிப்புகளை சரியான நேரத்தில் மேற்கொள்ளல் பொறுப்பு - DD/AD(கணக்குகள்)
			உரிய நேரத்தில், அறிக்கைகள் மற்றும் கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பித்தல். பொறுப்பு - DD/AD(நிதி) DD/AD(கணக்குகள்)

2.2	நிறுவன வளங்களின் உச்ச பயன்பாட்டிற்காக, நேர்மை மற்றும் பொறுப்புணர்வை ஊக்குவித்து, சரியான நேரத்தில் பதிலளிக்கக்கூடிய மற்றும் துல்லியமான நிதி முகாமைத்துவ முறைமையை உருவாக்குதல்.	நிதிப் பிரிவின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நேர அட்டவணை தயாரித்தல் மற்றும் அதைக் கண்காணித்தல்.	அனைத்துப் பிரிவின் உண்மையான செலவு, உண்மையான வருவாய் ஆகியவற்றை பாதிடப்பட்ட செலவு மற்றும் வருவாயுடன் ஒப்பிட்டு மாதாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல். பொறுப்பு - DD/AD(நிதி)
		அனைத்துப் பிரிவுகளினதும் ஒட்டுமொத்த செயலாற்றலை ஆராய்ந்து பகுப்பாய்வு செய்தல்	

பிரிவின் தந்துரோபாயங்கள் மற்றும் பிரதான செயற்பாடுகள்

இல.	குறிக்கோள்கள்	தந்துரோபாயங்கள்	பிரதான செயற்பாடுகள் / நடவடிக்கைகள்
உந்துதல் பரப்பு 3: நிறுவன இயலுமையை கட்டியெழுப்புதல் (நிதி வளங்களின் அபிவிருத்தியும் முகாமைத்துவமும்)			
3.1	பெறப்பட்ட நிதியின் உச்ச பயன்பாடு.	பொதுப் பணம் உரிய பணிகளுக்கு முறையாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.	நிர்வாகப் பொறுப்புக்கான நிதி செயலாற்றல் அறிக்கைகளைத் தயாரித்தல் - பொறுப்பு - DD/AD (நிதி)
3.2	சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்பாடுகளுக்கு CIDA நிதியத்திலிருந்து நிதியைப் பெறுதல்.	CIDA சட்டத்திற்கு இணங்க நிதி நிர்வாகத்தை மேற்கொள்ளல்	சட்டத்தின்படி நிர்மாணத் தொழில் தொடர்பான கொடுப்பனவுகளை செயல்படுத்துதல். அனைத்து நிதி ஊழியர்களுக்கும் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் வசதிகளை வழங்குவதன் மூலம், அவர்களின் விடயங்களில் எல்லைகளை நன்கு புரிந்து கொள்ளச் செய்தல். பொறுப்பு - D (F) CIDA.


வெற்றியின் அளவீடுகள்

- முதல் ஆண்டு இலக்குகள் - நேர்வரிசை செயல்முறைகள்.
- மேலதிக ஆண்டு இலக்குகள்- ஆண்டு 2- மூலோபாய உற்பத்தித்திறனை அதிகரிப்பு/ ஆண்டு 3- புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.
- வெற்றி/தோல்வியின் அளவீடுகள் - KPI அளவீடு.
- வெற்றிக்கான தேவைகள்- "சுபீட்சம் மற்றும் வளமான வாழ்வுக்கான அரசாங்க திட்டம்" இற்கான ஒரு வழிமுறை

நிதிசார் சிறப்பம்சங்கள்

நிர்மாண சந்தா கட்டணம், பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல், கருத்தரங்குகள் மற்றும் பாடநெறிகளை நடத்துதல், கனரக இயந்திர உபகரணங்கள் மற்றும் கட்டிட இடவசதிகளை வாடகைக்கு வழங்குதல் மற்றும் ஏனைய வருமான மூலங்கள் ஆகியவை நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான வருமான மூலங்கள் ஆகும். ஒப்பந்ததாரர்களுக்கு அதிகாரசபையால் நிகழ்நிலை கொடுப்பனவு நுழைவு வசதி வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்கள் மற்றும் புதிதாக வரும் வாடிக்கையாளர்கள் நிர்மாண சந்தா கட்டணம் மற்றும் பிற சேவைகளுக்கான பணத்தைச் செலுத்துவதற்கு இணைய வங்கி அமைப்பை பயன்படுத்தலாம். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கடன்பட்டோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்களை தீர்ப்பதற்கு நிதிப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் விளைவாக, 5 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிட முடியாத கடன்பட்டோர்கள் மற்றும் அடையாளம் காணப்படாத கடன்பட்டோர் பதிவழிக்கப்பட்டனர். பொது திறைசேரித் திணைக்களமானது பயிற்சி நிலையங்களின் மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்புக்காக ரூபா 25 மில்லியன் மூலதன மானியத்தை அதிகாரசபைக்கு வழங்கியுள்ளது. அந்த நிதியானது 2020 ஆம் ஆண்டில் நிர்மாண உபகரணப் பயிற்சி நிலையம் மற்றும் செயல்பாட்டுப் பயிற்சி நிலையம் ஆகியவற்றின் உத்தேசித்த

நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நிதிப் பிரிவு 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிற்கு முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொண்டது. நிதிப் பிரிவு சிறந்த சொத்து முகாமைத்துவ முறைமைகளை செயல்படுத்தியுள்ளது. பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் வகைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு சொத்துக்களும் கணினிமயமாக்கப்பட்ட சொத்து முகாமைத்துவ முறைமையின் மூலம் நாளதுவரையாக பராமரிக்கப்படுகின்றன.



நிதிப் பிரிவின் மனிதவள மூலதனம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிப் பிரிவானது அதன் உள்வாரி மற்றும் வெளிவாரி ஆர்வத் தரப்பினர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக அதன் பணிகளையும் கடமைகளையும் செயல்படுத்துகின்றது. 2020 ஆம் ஆண்டில் நிதித் தகவல்களை வழங்குவதற்காக வரிசை அமைச்சு தகவல் முறைமையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. CIDA இன் நிதிப் பிரிவு அந்தத் தகவல்களை சரியான நேரத்தில் சமர்ப்பித்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் நிதிச் சிறப்பம்சங்கள்

பிரிவுக்கான விதிமுறைகளை அறிமுகப்படுத்துதல்

1. சேவைகளுக்கான கட்டணம் செலுத்துவதற்கு வாடிக்கையாளர்களுக்கு புதிய நிகழ்நிலை கட்டண நுழைவாயில் அமைப்பை அறிமுகப்படுத்தப்பட்டது.
2. நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
3. உரிய காலத்தில் கடன்பட்டோரை அறவிடுவதற்கு ஒரு புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
4. வழங்குனர்களிற்கு பணம் செலுத்துவதற்கும் பயன்பாட்டு கட்டணம் செலுத்துவதற்கும் ஒரு புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
5. நிகழ்நிலை முறைமையின் ஊடாக சட்டப்பூர்வ கொடுப்பனவுகளை (EPF/ETF) செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
6. நிரந்தர ஊழியர்களுக்கான கடன் வரம்பு ரூபா 100,000 இலிருந்து ரூபா 250,000 ஆக உயர்த்தப்பட்டது.
7. திறைசேரி மூலதன மானியம் 2020 இல் உத்தேசித்த நோக்கத்திற்காக முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றது.
8. புதிய சொத்து முகாமைத்துவ முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் அனைத்து நிலையான சொத்துகளும் நாளதுவரையாக்கப்பட்டது.
9. இருப்பு காத்திருப்பு காலம் மற்றும் வைத்திருக்கும் செலவுகளை குறைத்தது. (JIT)
10. மேம்படுத்தப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வாடிக்கையாளர் சேவைகள் - வாடிக்கையாளர் காத்திருப்பு காலம் 3 முதல் 5 நிமிடங்கள் வரை காணப்படுகின்றது. (பண அறவிடல் சேவைகள் 3-5 நிமிடங்களுக்குள் வழங்கப்படும்)
11. ஊழியர் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்.
12. நிர்மாணச் சந்தாக் கட்டணம், பிற வருமானங்கள் 2020 இல் அதிகரிக்கப்பட்டுள்ளன.
13. வருவாய் சேகரிப்பை தரப்படுத்துதல் மற்றும் அடையாளம் காணுதல்.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

நிதிக்கூற்றுக்கள் - 2020

1. கூட்டிணைப்புத் தகவல்கள்

1.1 அறிக்கையிடல் நிறுவனம்

நிர்மாண பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை சட்டத்தின் கீழ் (CIDA) நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபையாக மாற்றப்பட்டது. தற்பொழுது ICTAD நிறுவனத்தின் சட்டரீதியான பதில் நிறுவனமாக CIDA விளங்குகின்றது.

நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபையானது (CIDA) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தினால் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை சட்டம் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 1 இன் பிரகாரம் இல. 1896/19 மற்றும் 2015 சனவரி 06 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பகுதி 1 இல் பிரசுரிக்கப்பட்டதற்கிணங்க 2014 டிசம்பர் 29 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது. CIDA நிறுவனம் கிராமிய வீடமைப்பு, நிர்மாண மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்குகின்றது. அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் சவுசிறிபாய கட்டிடம், இல. 123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

1.2 அடிப்படை செயற்பாடுகளும் தொழிற்படும் தன்மையும்

தேசிய கொள்கைச் சட்டகத்திற்குள்ளால் நிர்மாணத்துறையில் பயிற்சி, நிபுணத்துவம் மற்றும் தர உத்தரவாதம் என்பவற்றை விருத்தி செய்து வசதியளிப்பதன் மூலம் சிறந்த ஒழுங்குபடுத்தல் ஊடாக தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சமூக ரீதியில் எமது நாட்டை கட்டியெழுப்புதலே CIDA இன் இலட்சியமாக உள்ளது.

1.3 ஆளணி எண்ணிக்கை

2020 டிசம்பர் 31 ஆம் திகதியன்று CIDA நிறுவனத்தின் மொத்த ஆளணி 257 ஆகும். அது 2019 ஆம் ஆண்டில் 281 ஆக இருந்தது.

1.4 நிதியாண்டு

2020 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையக் கூடிய 12 மாத காலப்பகுதியாகும்.

2. முக்கியத்துவம் வாய்ந்த கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1 நிதி அறிக்கை தயாரிப்பின் போது அடிப்படையாகக் கொள்ளப்பட்டவை

CIDA நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய முறைக்கு அமைய இலங்கை ரூபாய் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

2.2 இணக்கப்பாட்டு அறிக்கை

CIDA நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLPSAS) எற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, SLPSAS பயன்படுத்தப்படாத விடயப் பரப்புகளிற்காக இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் கணக்கீட்டு நியமங்களும் பயன்படுத்தப்பட்டன.

2.3 சொத்துக்களும் மதிப்பீட்டின் அடிப்படைகளும்

2.3.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயங்கள் நிதிக் கூற்றுக்களில் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு கிரயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயங்கள் ஏதேனும் இடைநேர் செலவுகளுடன் கூடிய மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் அல்லது கொள்வனவுக் கிரயங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

நிலம் மற்றும் கட்டிடங்கள் தவிர்ந்த ஏனைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு கிரய மாதிரியை அதிகாரசபை பயன்படுத்துவதுடன் இவற்றின் கொள்வனவு அல்லது நிர்மாணக் கிரயங்கள் அவற்றுக்கான இடைநேர்செலவுகள் கூட்டப்பட்டு தேய்மானம் மற்றும் திரட்டப்பட்ட குறைபாடு இழப்புகள் கழிக்கப்பட்டு பதிவுசெய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதியானது, சூழ்நிலைகளில் ஏற்படும் மாற்றங்கள், முன்கொண்டு செல்லும் பெறுமதியை அறவிட முடியாது என்பதைக் குறிக்கும் போது, பெறுமதிக்குறைவு சேதத்திற்காக மீள்மதிப்பிடப்படுகிறது.

2.3.2 குத்தகை சொத்துக்கள்

உரிமையின் அனைத்து இடர்களையும் வெகுமதிகளையும் அதிகாரசபை கணிசமான அளவில் கொண்டிருக்கும் குத்தகைகள் நிதி குத்தகைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பேரில், குத்தகைக்கு விடப்பட்ட சொத்தின் குறைந்த அல்லது அதன் நியாயமான பெறுமதியில் மற்றும் குறைந்தபட்ச குத்தகைக் கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதிக்கு சமமான தொகையில் அளவிடப்பட்டு மூலதனமாக்கப்படுகிறது. ஆரம்ப அங்கீகாரத்திற்குப் பிறகு, அந்தச் சொத்திற்குப் பொருந்தக்கூடிய கணக்கீட்டுக் கொள்கையின்படி சொத்து கணக்கிடப்படுகிறது. குத்தகை நிலம் தனித்தனியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2.3.3 தொடர்ந்தேற்படும் கிரயங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பகுதியை மாற்றுவதற்கான கிரயம், எதிர்கால பொருளாதார நன்மை பொதிந்திருக்க வாய்ப்பிருந்தால், அல்லது அதிகாரசபைக்கு நலன் உட்பாய்ச்சப்படுகின்ற மற்றும் அதன் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாயின் சொத்தை எடுத்துச் செல்லும் தொகையில் அங்கீகரிக்கப்படுகிறது. மாற்றிய பகுதியின் கிரயம் சுமந்து செல்லும் தொகையில் அங்கீகரிக்கப்படவில்லை. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் நாளாந்த பராமரிப்புக்காக ஏற்படும் கிரயம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது.

2.3.4 அங்கீகாரம் நீக்கம்

ஒரு ஆதனம், பொறி மற்றும் உபகரண விடயத்தின் முன்கொண்டு செல்லும் தொகை அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அங்கீகரிக்கப்படுவதில்லை. அங்கீகாரத்தை நீக்குவதன் மூலம் ஏற்படும் இலாபங்கள் அல்லது இழப்புகள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

2.4.5 பெறுமானத்தேய்வு

சகல ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தின் மீது நேர் கோட்டு அடிப்படையினைப் பயன்படுத்தி பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது. அவற்றின் பயன்தரும் ஆயுட்காலம் முழுவதற்கும் பெறுமானத்தேய்வு செய்வதற்காக பின்வரும் மதிப்பிடப்பட்ட ஆயட்காலம் பயன்படுத்தப்படுகின்றது. 2015 இலிருந்து செல்லுபடியாகும் வீதங்கள் வருமாறு

விடயம்	ஆயுள் காலம்	விகிதம் (%)
காணி		0.0
கட்டிடங்களும் கட்டிடங்கள் மேம்படுத்தலும்	40	2.5
தளபாட பொருத்தல்கள் மற்றும் அலுவலக சாதனங்கள்	5	20.0
இயந்திர சாதனங்கள்	8	12.5
ஆடியோ விஷுவல் சாதனங்கள்	4	25.0
கருவிகளும் சாதனங்களும்	5	20.0
மோட்டார் வாகனங்கள்	8	12.5
நூலக புத்தகங்கள்	5	20.0

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின தேய்மானக் கட்டணங்கள் தனித்தனியாக அடையாளம் காணப்படுவதுடன அவைகள் பாவனைக்கு கிடைப்பதற்காக உள்ள நிலையிலேயே தேய்மானங்கள் கணக்கிடப்படுகின்றன. இறையில் காணிகளுக்கு தேய்மானம் கணிப்பிடப்படுவதில்லை.

2.4 இருப்புக்கள்

கையிருப்புக்கள் பிரதானமாக பொருள் இருப்புக்களையும் நுகர்வுப் பொருட்களையும் உள்ளடக்குகின்றன. பொருள் இருப்புக்கள் பிரதானமாக உதிரிப் பாகங்கள், பிரசுரங்கள் மற்றும் காகிதாதிகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. பராமரிப்புப் பொருட்கள், சுத்திகரிப்புப் பொருட்கள், மின்னியல் உபகரணங்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. இவ்விருப்புக்கள் சராசரி கிரய அடிப்படையில் பதியப்படுகின்றன.

2.5 குத்தகைக் காணிகள்

குறிப்பிட்ட காணிக்கான குத்தகை, குத்தகை வாடகை என்பன குத்தகை காலத்தில் சம தவணைகளில் பதிவழிப்பு செய்யப்படுகின்றன.

2.6 வருமதிகள்

பெறமுடியாத ஐயக் கடன்களிற்கான ஏற்பாடுகளை கழித்து தேறிய பெறுமதியில் வருமதிகள் அறிக்கையிடப்படுகின்றன.

2.7 அறவிடமுடியாத மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகள்

அறவிட முடியாத மற்றும் ஐயக் கடன்கள் கணக்கிடப்பட்டு பின்வருமாறு கணக்குகளில் காட்டப்படுகின்றன.

தீர்க்கப்படாத காலம்	மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள்
12 மாதங்களுக்கு குறைவானவை	இல்லை
1 வருடம் முதல் 2 வருடம் வரை	5%
2 வருடம் முதல் 3 வருடம் வரை	
3 வருடம் முதல் 4 வருடம் வரை	
4 வருடம் முதல் 5 வருடம் வரை	
5 வருடங்களுக்கு மேற்பட்டவை	100%

2.8 காசு மற்றும் காசுக்கு சமனானவைகள்

காசு மற்றும் காசுக்கு சமமானவை முதலீடுகள், காசு மீதி மற்றும் வங்கி மீதி என்பவற்றைக் கொண்டிருக்கும்.

2.9 பிற்போட்ட வருமானம்

பொதுத் திறைசேரியிலிருந்து மூலதனச் செலவுகளுக்காக வழங்கப்பட்ட மூலதன நிதி ஒதுக்கீடுகள் பிற்போட்ட வருமானத்திற்குள் உள்ளடக்கப்படும்.

மூலதன மானியமாக காணப்படுமிடத்து சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் முழுவதற்கும் முறையான அடிப்படையொன்றில் பிற்போட்ட வருமானமானமானது வருமானமாக அங்கீகரிக்கப்படுவதுடன் முலதனக் கொள்வனவுகளிற்கான இந்த பிற்போட்ட வருமானம் அதற்கேற்ப காலத்தேய்மானம் செய்யப்படுகின்றது.

2.10 ஓய்வூதிய பணிக்கொடை

நிறுவனம் வருடாந்தம் ஊழியர்களுக்கான பணிக்கொடைக்காக ஒதுக்கீடுகளை செய்து வருகின்றது. இது பொறுப்புக்கள் என்ற அடிப்படையில் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. நிரந்தர ஊழியர் ஒருவர் பூரணமாக பூர்த்தி செய்யும் ஒவ்வொரு வருடத்தினதும் ஆகக்குறைந்தது ஒரு மாத சம்பளத்தின் அரை பங்கு வருடாந்த மதிப்பீட்டுக்காக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. ஊழியரது ஆரம்ப வருடத்தில் வரையப்பட்ட சம்பளம் இங்கு பணப் பெறுமதிக்காக கொள்ளப்படுகின்றது. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய தொடர்ச்சியான 5 வருட சேவைக் காலத்தைக் கொண்ட ஊழியர்களே அதற்கு தகுதி பெறுகின்றனர்.

2.11 அரசாங்கத்தின் மானியங்கள்

2.11.1 மீண்டெழும் மானியம்

அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட மீண்டுவரும் மானியங்கள் CIDA நிறுவனத்தினது வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

2.11.2 மூலதன மானியங்கள்

அரசாங்கத்திடமிருந்து காசாகவும் பொருளாகவும் கிடைக்கப்பெற்ற மூலதன மானியங்கள் பிற்போட்ட வருமானங்கள் என்ற அடிப்படையில் அதற்குரிய சொத்துக்களின் சிறந்த பாவனையைப் பொறுத்து முறையான மற்றும் பகுத்தறிவு ரீதியான ஒரு வருமானமாக எடுக்கப்படுகின்றது.

2.12 வருவாய் அங்கீகாரம்

நிறுவனம் பின்வரும் மூலங்களிலிருந்து வருமானத்தை ஈட்டுகின்றது. அத்தைகய வருமானம் அட்டுறு அடிப்படையிலான கணக்கீட்டு முறையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

இயந்திரங்களை வாடகைக்கு விடுதல்
பாடநெறிக் கட்டணங்கள்
வெளியீடுகள் விற்பனை
கேட்போர் கூடம், மாநாட்டு அறை, கருத்தரங்கு அறைகள் வாடகை
கருத்தரங்குகளும் செயலமர்வுகளும்

2.13 செலவுகள்

அனைத்து செலவுகளும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

2.14 சட்ட நடவடிக்கைகள்

தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகள் தொழில் திணைக்களத்தின் தொழில் நியாய சபையிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவையில் உள்ளன. அவை தொடர்பான தகவல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

விபரம்	குறிப்பு	2020	2019
		ரூபா	ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	1	825,653,503.97	86,668,771.71
நடைமுறைச் சொத்துக்கள்			
காசும் காசுக்கு சமமானவையும்	2	436,565,272.88	355,558,714.05
முதலீடுகள்	3	153,231,432.25	151,857,303.00
கடன்பட்டோர்	4	36,436,264.94	38,858,374.63
இருப்புக்கள்	5	145,789,918.50	48,359,110.30
முற்கொடுப்பனவுகள்	6	1,031,765.50	3,224,039.28
ஏனைய பெறவேண்டியவை	7	41,985,905.27	4,999,141.01
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	8	5,269,993.95	11,232,839.39
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		820,310,553.29	**714,089,521.66**
மொத்தச் சொத்துக்கள்		**1,645,964,057.26**	**1,600,758,293.37**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
கடன்கொடுத்தோர்	9	8,738,898.90	31,142,345.16
தனியார் அரச பங்குடமை அடிப்படையில் நிர்மாணத் துறை திறன் பயிற்சிக்கான கட்டுநிதி	10	185,748,350.02	167,241,796.94
முற்பணமாக கிடைத்த வருமானம்	11	76,519,179.81	64,672,848.42
செலுத்த வேண்டிய வரி	12	1,414,669.67	109,034.00
திறைசேரி கட்டுநிதி	13	70,391,211.24	85,297,570.24
ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள்	14	74,046,399.39	36,828,888.74
குறுங்கால ஏற்பாடுகள்	15	156,400.00	156,400.00
ஊழியர் நலன்கள்	16	3,450,726.26	3,475,133.60
		420,465,835.29	**388,924,017.10**
நடைமுறையல்லா பொறுப்புக்கள்			
ஒய்வுதிய நலன்	17	**95,441,560.50**	90,705,245.50
ஏனைய நடைமுறையல்லா பொறுப்புக்கள்	18	15,446,556.67	24,552,289.83
		110,888,117.17	**115,257,535.33**
மொத்தப் பொறுப்புக்கள்		531,353,952.46	**504,181,552.43**
மொத்த தேறிய சொத்து / உரிமைத்துவம்		**1,114,610,104.80**	**1,096,576,740.94**
தேறிய சொத்து / உரிமைத்துவம்			
கையேற்கப்பட்ட தேறிய சொத்து		25,449,909.19	25,449,909.19
பிற்போட்ட வருமானம் திறைசேரி மானியம்		389,472,471.41	89,271,971.72
மோடார் வாகன நன்கொடை		45,050,000.00	45,050,000.00
மீள்மதிப்பீடு		625,744,563.49	625,744,563.49
திரண்ட நிதியம்		28,893,160.71	11,060,296.54
மொத்த் தேறிய சொத்து / உரிமைத்துவம்		**1,114,610,104.80**	**1,096,576,740.94**

சான்றுறுதிப்படுத்தல்

மேற்படி நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிலைவரத்தையும் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மிகை/(பற்றாக்குறை) இனையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்று நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

ரீ.வீ. செம்புகுட்டியாரச்சி
பணிப்பாளர் (நிதி)

பொறி. ஆனந்த விஜேசிங்ஹ
பதில்கடமை பணிப்பாளர் நாயகம்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்துச் சமர்ப்பிக்கும் பொறுப்பு முகாமைத்துவச் சபைக்கு உள்ளது. முகாமைத்துச் சபையின் சார்பாக இந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்படுகின்றது.

பேராசிரியர் என்.ரீ. சொஹான் விஜயசேகர
தலைவர் மற்றும் சபைப் பணிப்பாளர்

யூ.எஸ். அபேரத்ன
தொழிற்பாட்டுப் பணிப்பாளர் மற்றும் சபைப் பணிப்பாளர்

2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று

விபரம்	குறிப்பு	2020	2019
		ரூபா	ரூபா
வருமானம்			
பரிமாற்றல் கொடுக்கல் வாங்கல்கள்			
செயற்பாட்டு வருமானம்	19	240,357,967.12	292,784,818.73
ஏனைய செயற்பாட்டு வருமானம்	20	63,671,518.12	21,582,958.36
		304,029,485.24	**314,367,777.09**
பரிமாற்றமற்ற கொடுக்கல் வாங்கல்கள்			
திறைசேரி மானியம் - மீண்டுவருபவை		95,000,000.00	70,000,000.00
வெளிநாட்டு உதவி வருமானம்		-	2,663,658.98
திறைசேரி மானியம் - மூலதனம் (பிற்போட்ட வருமானம்)		57,476,859.31	57,431,410.04
திறைசேரி மானியம் - மூலதனம்- பயிச்சி நிலையங்களை புனரமைத்தல் மற்றும் பராமரித்தல்		14,428,571.38	16,875,691.09
திறைசேரி மானியம் - மூலதனம்- நிர்மாண உபகரண இயந்திரவியல் பாடநெறி		10,571,429.62	13,600,000.00
திறைசேரி மானியம் - மூலதனம்- அரச தனியார் பங்குடமை அடிப்படையில் நிர்மாணக் கைத்தொழிலுக்கான திறன் பயிற்சி		90,105,696.02	232,747,677.06
திறைசேரிக் கட்டுநிதி - மூலதனம் - நிர்மாணத் துறையில் ஈடுபடுவோருக்கான தனியார் மற்றும் பொதுத்துறை பங்குடமை அடிப்படையில் திறன் அபிவிருத்திப் பயிற்சிநெறி			
மொத்த வருமானம்		**571,612,041.57**	**707,686,214.26**
(-) செலவினம்			
திறைசேரி மானியம் - மூலதனம்- பயிச்சி நிலையங்களை புனரமைத்தல் மற்றும் பராமரித்தல்	21	14,428,571.38	16,875,691.09
திறைசேரி மானியம் - மூலதனம்- நிர்மாண உபகரண இயந்திரவியல் பாடநெறி	22	10,571,429.62	13,600,000.00
திறைசேரிக் கட்டுநிதி - மூலதனம் - நிர்மாணத் துறையில் ஈடுபடுவோருக்கான தனியார் மற்றும் பொதுத்துறை பங்குடமை அடிப்படையில் திறன் அபிவிருத்திப் பயிற்சிநெறி	23	90,105,696.02	232,747,677.06
(b) 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதிற்கு முறையே ரூ.19,512,500 செலவுடையதும் ரூ.7,317,187 முன்கொணரப்படுகின்ற தொகையுடையதுமான பதின்மூன்று (13) வகை இயந்திராதிகளும் மற்றும் உபகரணங்களும் 2019 ஆம் ஆண்டு நடத்திய பொருட்கள் கணக்கெடுப்பின் போது பாவனைக்கொவ்வாத நிலையில் இருந்தமை கண்டறியப்பட்டது. இதனையடுத்து, 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரை இந்த பொருட்களை அகற்றும் நிமித்தம் நடவடிக்கையை எடுக்காமல் கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள ஒரு மாற்றமாக 2020 ஆம் ஆண்டில் ரூ.7,317,187 பெறுமதியான தேய்மானம் கணிப்பிடக் கூடிய சொத்துக்கள் பிடித்துவைத்த இலாபத்திற்கு எதிராக சீராக்கப்பட்டிருந்தன. மேலும், கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளிலுள்ள, தவறுகள் தொடர்பான SLPSAS 3 நியமத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் இது தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருந்தன.

(c) நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு (ந.அ.அ.ச.) சொந்தமான ஒரு காணியில் நிருவகித்து செல்லப்படுகின்ற இந்த அதிகார சபையினது நிர்மாண இயந்திர பயிற்சி நிலையத்தின் (CETRAC) நிமித்தம் நில உரித்து உறுதியை வழங்கும் பொருட்டு மொத்தமாக ரூ.54,890,701 தொகை ஒன்றை செலுத்துமாறு 2019 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ந.அ.அ.ச. இந்த அதிகார சபைக்கு வேண்டுகோளை விடுத்துள்ளது. எவ்வாறாயினும், அதிகார சபை இந்த அறிக்கை வெளியிடப் படும் திகதி வரையிலும் இது வரை ந.அ.அ.ச. சபைக்கு குறித்த தொகையை செலுத்த தவறியிருந்தது. இது தொடர்பாக எந்த விதமான ஏற்பாடு அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(d) மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில், நிர்மாண சிறப்பு விருதுகள் வைபவம் நடத்தப்படாதிருந்தாலும், 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறித்த இந்த வைபவத்தை நடத்தும் நோக்கில் நிர்மாண ஒப்பந்த தரப்புகளிடம் இருந்து ரூ.2,633,914 தொகை ஒன்று கிடைத்திருந்தது. எனினும் இந்த தொகையை, நிதிக் கூற்றுக்களில் ஒரு நடைமுறை சார்ந்த பொறுப்பாக மதிக்காமல் நிதிக் கூற்றுக்களில் ஒரு

இயக்கச்செயற்பாடு சாராத வருமானமாக இனங்காணப் பட்டிருந்தது. இதன் விளைவாக, மீளாய்வு ஆண்டிற்கான மிகைகள் குறித்த அத்தகைய ஒரு தொகையால் நடைமுறை சார் பொறுப்புக்களில் மிகையாக எடுத்துரைக்கப்பட்டு இருந்ததன.

(e) ஆண்டு 13 உத்தரவாத தொடர் கல்வி (NVQ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்தும் பொருட்டு 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கல்வி அமைச்சு ரூ.45,844,000 தொகையான நிதியை இந்த அதிகார சபைக்கு ஒதுக்கியுள்ளது. அந்த தொகையில் முறையே ரூ. 10,000,000 தொகையும் மற்றும் ரூ. 35,844,000 தொகையும் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியிலும் மற்றும் 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் கிடைத்துள்ளன. எவ்வாறாயினும், அறிக்கையிடப்படும் காலப் பகுதியில் இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் நிமித்தம் ரூ.5,906,904 தொகை மாத்திரம் செலாவக செய்யப்பட்டிருந்த போதிலும், அதிகார சபை 2020 ஆம் ஆண்டிற்கு ரூ.45,398,000 தொகையை வருமானமாக இனங்கண்டு இருந்தது.

மேலும், ஏற்பட்டிருந்த செலவினமும் அதன் ஏதாவது மிகைகளும் தனித் தனியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(f) மொத்தம் ரூ.22,609,256 தொகையான ஐந்து (5) விடயங்கள் பற்றிய விரிவான அட்டவணைகள், குத்தகை மற்றும் வாடகை ஒப்பந்தங்கள், நிலுவை சார்ந்த உறுதிப்படுத்துகைகள் முதலியன போன்ற கணக்காய்வுக்கான சான்றுகள், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த குறித்த விடயங்களின் செவ்வைத் தன்மையை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு அழைக்கப்பட்டிருந்தும் கணக்காய்வின் நிமித்தம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

நான் எனது கணக்காய்வை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (SLAuSs) பிரகாரம் மேற்கொண்டுள்ளேன். அந்த நியமங்களின் கீழ் எனது பொறுப்புக்கள் பற்றி எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் பிரிவில் காணப்படுகின்ற கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் தொடர்பான விடயத்தில் மேலும் விவரிக்கப் பட்டுள்ளன. எனது கணக்காய்வின் நிமித்தம் எனக்கு கிடைத்த கணக்காய்வுக்கான சான்றுகள் எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான ஒரு அடிப்படையை முன்வைக்க போதுமாக மற்றும் பொருத்தமாக இருந்தன என நான் நம்புகின்றேன்.

1.3 அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கியிருந்த ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்களில் அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளங்கிய தகவல்கள் உள்ளடக்கியிருந்தன. ஆயினும் அத்தகைய தகவல்களில் நிதிக் கூற்றுக்களும் மற்றும் இந்த கணக்காய்வாளர் அறிக்கையின் திகதிற்கு முன்னர் எனக்கு கிடைத்துள்ள அந்த அறிக்கையின் பேரிலான தகவலும் அத்தகைய தகவல்களில் உள்ளடங்கியிருக்கவில்லை. இந்த ஏனைய தகவல்களின் நிமித்தம் முகாமைத்துவம் பொறுப்புக்கூற வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்களை நான் உள்ளடக்கவில்லை. அதன் பேரில் எந்த உத்தரவாத முடிவையும் என்னால் வெளியிடுவதற்கு முடியாது.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில், மேலே இனங்கண்டறிந்த ஏனைய தகவல்களை வாசிப்பதும், அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் பொருண்மையான பிறழ்வுடையதாக காணப்படுகின்றனவா இல்லையெனில் எனது கண்காய்வில் நான் பெற்ற அறிவுக்கு அல்லது நிதிக் கூற்றுக்களுக்கு பொருண்மை அளவில் முரணானதாக காணப்படுகின்றனவா என ஆராய்வதும் என்னுடைய ஒரு பொறுப்பாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிற்கு முன்னர் எனக்கு கிடைத்துள்ள ஏனைய தகவல்களின் பேரில் நான் நிறைவேற்றிய பணியின் அடிப்படையில் அத்தகைய ஒரு விடயம் காணப்படுமாயின், அந்த விடயத்தை அறிக்கையிடும் நிமித்தம் எனக்கு தேவைப்படுகின்ற ஏனைய தகவல்கள் பொருண்மையான பிறழ்வுக் கூற்றுக்கள் என என்னால் முடிவுக்கு வரலாம். இது தொடர்பில் நான் எதனையும் அறிக்கையிடுவதற்கு விரும்பவில்லை.

1.4 நிதிக் கூற்றுக்களுக்கான சிறப்பு நிருவாகம் சாட்டப்பட்டுள்ள முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இலங்கைப் பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான கண்ணோட்டத்தை பிரதிபலிக்கின்ற வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதும் மற்றும் முகாமை செய்ய வேண்டும் என்ற வகையில் அதன் நிமித்தம் அத்தகைய கட்டுப்பாட்டை பிரயோகிப்பதும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான புறழ்கூற்றுக்களின்றி அல்லது தவறு அல்லது மோசடி நீங்கியதாக தயாரிப்பதை இயலச்செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது, அதிகார சபையை நிகழும் அடிப்படையில் அதனை முன்னெடுத்து செல்வதற்கு அதற்கு இருக்கும் ஆற்றலையும், அதிகார சபையை மூடிவிடுவதற்கு அல்லது அதனுடைய செயற்பாடுகளை நிறுத்துவதற்கு அல்லது அவ்வாறு செய்யாமல் வேறு எந்தவிதமான உண்மையான மாற்றுவழியும் இல்லையென கருதுகின்ற போது நிகழ்கின்ற கணக்கீட்டு அடிப்படை அம்சத்தை பிரயோகித்து விடயங்களை, ஏற்புடையவாறு வெளிப்படுத்துவதை உறுதிசெய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடும் செயல்முறையை மேற்பார்வை செய்வது சிறப்பு நிருவாகம் பொறுப்பு ஒப்படைக்கப்படும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகார சபை அது தயாரிக்க வேண்டிய அதன் வருடாந்த மற்றும் வழமையான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய வகையில் அதன் சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பவற்றின் பதிவுகளையும், புத்தகங்களையும் உரிய முறையில் 2018 இன் 19

ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேணுவதற்கு அதிகார சபை தேவைப்படுத்தப்படுகின்றது.

1.5 நிதி கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளருக்கு உள்ள கணக்காய்வு பற்றிய பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரமணாக ஏற்படக் கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நீங்கி இருக்கின்றனவா என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்ககின்ற ஒரு கணக்காய்வாளர் அறிக்கையை பெற்றுக் கொடுப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான ஒரு உறுதிப்பாடு, உறுதிப்பாட்டின் ஒரு உயர் நிலையாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான ஒரு புறழ்கூற்று காணப்பட்டால் அதனை எல்லா நேரங்களிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதமளிக்காது. மோசடி அல்லது தவறு காரணமாக பிறழ் கூற்றுக்கள் எழக்கூடும் என்பதால் இந்த நிதி கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பரிசீலனையாளர்களால் பொருளாதாரசார் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் போது அது பற்றி கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

என்னால் தொழில்முறை தீர்ப்பினதும் மற்றும் ஐயத்தினதும் அடிப்படையில் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்:

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்களை இனங்கண்டு மதிப்பிடும் பொருட்டு சமயோசித உகந்த கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப் பட்டன. மோசடியும் தவறும் காரணமாக ஏற்படும் இடர்களை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு போதிய உகந்த பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்வது எனது இந்த கணக்காய்வுக்கான அபிப்பிராயத்தின் அடிப்படையாகும். போதியளவான உண்மையான கூற்றுக்களிலிருந்து எழுகின்ற இடர்களை விடவும், மோசடியாக நிகழும் இடர்கள் கடுமையானவையாக இருப்பது அவை பொய்யான, போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல், தவறாக காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளிலிருந்து விலகுதல் முதலியன போன்ற காரணங்களினாலாகும்.

- சந்தர்ப்ப சூழ்நிலைகளில் பொருத்தமான உகந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுக்கு உரிய உள்ளக ரீதியான கட்டுப்பாட்டை புரிந்து கொள்ளவதற்காகவேயன்றி, அதிகார சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் பயன்தகு தன்மை தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடும் நோக்கத்திற்கானது அல்ல.

- கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் மற்றும் முகாமைத்துவம் வெளிப்படுத்திய சம்பந்தப்படும் வெளிப்படுத்தல்களினதும் நியாயத்தன்மையையும் மற்றும் பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாட்டையும் மதிப்பீடு செய்தல்.

- நிகழும் அடிப்படையில் அதிகார சபையை தொடர்ந்து நிருவகித்து செல்லும் பொருட்டு அதற்கு இருக்கின்ற ஆற்றலில் கணிசமான அளவு சந்தேகத்தை தோற்றுவிக்கலாம் எனும் நிகழ்வுகள் அல்லது நிலவரங்கள் சம்பந்தமாக ஏதாவது பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என கண்டறிவதற்கு பெற்றுக் கொள்ளப்படும் கணக்காய்வுக்கான சான்றுகளின் அடிப்படையிலும் மற்றும் கணக்கீட்டு அடிப்படையிலும் மற்றும் நிகழ்கின்ற அடிப்படையிலும் முகாமைத்துவத்தினது பயனின் பொருத்தம் தொடர்பாக முடிவு செய்தல். பொருன்மையான நிச்சயத்தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் காணப்படும் தொடர்புடைய வெளிப்படுத்துகைகளுக்கான என கணக்காய்வு அறிக்கையில் கவனத்தை ஈர்ப்பதற்கும் அல்லது அத்தகைய வெளிப்படுத்துகைகள் போதுமானதாக காணப்படவில்லையெனில் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தை மாற்றவும் தேவைப்படுத்தப்படுவேன். எனது வெளிப்படுத்தல்கள் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரை நான் பெற்ற கணக்காய்வுக்கான சான்றுகளின் அடிப்படையில் அமைந்திருக்கும். எனினும், நிகழ்வுகள் அல்லது நிலமைகள் தொடர்ந்து செல்ல முடியாதளவுக்கு அதிகார சபையின் இயக்கத்தை நிறுத்த வழிவகுக்கலாம்.

- நிதிக் கூற்றுக்கள் முக்கியமான கொடுக்கல்வாங்கல்களையும் அதே போல் நிகழ்வுகளையும் நியாயமான சமர்ப்பணத்தை அடையக் கூடிய வகையில் பிரதிபலிக்கின்றனவா என்ற அம்சமும் வெளிப்படுத்தல்ளும் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பணவு, கட்டமைப்பு மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பவற்றை மதிப்பிடுதல்.

எனது கணக்காய்வின் போது நான் இனங்கண்டறிந்த உள்ளக கட்டுப்பாட்டில் காணப்படும் ஏதாவது கணிசமான குறைபாடுகள் அடங்கலாக ஏனைய விடய அம்சங்களுக்கு மத்தியில் கீழே காணப்படும் விடயங்களை சிறப்பு நிருவாகம் ஒப்படைக்கப் பட்டுள்ள முகாமைத்துவத்திற்கு அறிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை பற்றிய தேவைப்பாடுகள்

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலும் மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திலும் பின்வருகின்ற தேவைப்பாடுகளுக்கான விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 முனைப்பழியுள்ள கருத்து தொடர்பான அடிப்படைப் பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர, கணக்காய்வுக்கு தேவையான சகல வகை தகவல்களையும் மற்றும் விளக்கங்களையும் நான் பெற்றுள்ளேன். மேலும் எனது பரீட்சையிலிருந்து தோன்றிய வரையில், முறையான கணக்குப் பதிவுகள் அதிகார சபையினால் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (a) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க பேணப்பட்டுள்ளன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (1) (d) (iii) இன் தேவைப்பாடுகள் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் ஒத்துப்போகின்றன.

2.1.3 சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 6 (l) (d) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் நான் செய்த அனைத்து சிபாரிசுகளும் உள்ளடங்குகின்றன.

2.2 நடைமுறைகள் மற்றும் பெறப்பட்டிருந்த சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த விடயம் எதனையும் நான் அவதானிக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 12 (d) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகார சபையின் ஆளுகை சபையில் உள்ள எந்தவொரு உறுப்பினருக்கும் வணிகத்தின் இயல்பான காரணத்திற்கு அப்பாற்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை இருப்பதாக தெரியவில்லை.

2.22 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (f) இன் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையின் ஆளுகை சபை வெளியிட்டுள்ள ஏற்புடைய சட்டம், பொது மற்றும் சிறப்பு வழிகாட்டல்கள் ஆகியவற்றிற்கு அதிகார சபை இணங்கவில்லை என்பதை தவிர;

சட்டங்களுக்கான/ வழிகாட்டல்களுக்கான குறிப்பு	
(a) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் II ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொதுத் தொழில் முயற்சிகள் பற்றிய சுற்றறிக்கை	திறைசேரியிலிருந்து தேவையான அங்கீகாரங்களையும் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கத்தையும் பெற்றுக் கொள்ளாமல் கடன் வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் என்பன போன்ற குறுங்கால முதலீட்டு வளங்களில் ரூ.1,3231,432 தொகையொன்று முதலீடு செய்யப்பட்டிருந்தது. மேற்குறித்த முதலீடுகளில், மொத்தம் ரூ. 140,707,803 தொகை 04 வருடங்களாக மாறாமல் அவ்வாறே இருந்திருந்தது.
(b) இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு அரசாங்கத்தின் நிதிப் பிரமாணக் குறிப்புகள் பற்றிய விபரம்	

(i) நிதிப் பிரமாணக் குறிப்பு இலக்கம் 571 (2)

வருட காலப் பகுதியில் உள்ள அனைத்து வைப்புத் தொகைகளும் அதிகார சபையின் வருமானத்தில் வரவு வைக்கப்பட வேண்டும் என்றிருந்தாலும், அவ்வாறு செய்யாமல், இனங்காணப் படாத மற்றும் காலாவதியான வைப்புத் தொகையாக செலுத்த வேண்டிய பிடித்து வைத்தல் மற்றும் கேள்வி மனு வைப்புத் தொகை முறையே ரூ. 1,787,782 மற்றும் தொகை ரூ. 159,500 ஆகிய தொகைகள் 2020 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதிற்கு அதிகார சபையினால் வைப்புக்களில் வைப்புசெய்யப்பட்டிருந்தன.

(ii) 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்டுள்ளவாறான நிதிப் பிரமாணக் குறிப்பு இலக்கம் 371 மற்றும் அதிகார சபை வெளியிட்டுள்ள 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை.

- முற்பணங்கள் வழங்கப்பட்டதன் நோக்கம் நிறைவடைந்தவுடன் அல்லது நிதியாண்டு முடிவடைந்தவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும் என்றாலும், 13 நிகழ்வுகளில் பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் 30 முதல் 170 நாட்கள் வரையிலான கால தாமதத்திற்குப் பிறகு ரூ.683,700 செலுத்தப்பட்டிருந்தது.

- உப-இம்ப்ரெஸ்டின் ஏதேனும் இருப்பு பற்றிய விபரங்களை ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிற்குப் பிறகு சமர்ப்பிக்க வேண்டும் என்றிருந்தாலும், அத்தகைய இம்ப்ரெஸ்ட் தொகை 5 சந்தர்ப்பங்களில் நான்கு தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட ரூ. 4,092,735 தொகை 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவிலும் தீர்க்கப்படாமலிருந்தது.

- தற்காலிக துணை இம்ப்ரெஸ்ட் மொத்தம் ரூ. 965,150 தொகை 17 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தது. ரூ. 492,226 தொகையொன்று 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை ரொக்கமாக 07 முதல் 196 நாட்கள் வரையான காலப் பகுதிற்கு முற்பணங்களை செலுத்துவதற்கு முன் சரியான மதிப்பீட்டைத் தயாரிக்காத காரணத்தால் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) நிதிப் பிரமாணக் குறிப்பு இலக்கங்கள் 756, 757, 758 மற்றும் 759

(c) ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை மற்றும் 2018 ஆம் ஆண்டின் யூலை மாதம் 16 ஆம் திகதிய 03/2018 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி.

(d) பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆம் திகதிய PED/01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி

ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்தின் முடிவிலும் நிதிநிலை கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நடைமுறை அல்லாத சொத்துக்களின் பௌதீக இருப்பை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு அறிக்கையிடல் காலத்திற்கும் தொடர்புடைய வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றிருந்தாலும், 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதிற்கு அதிகார சபையின் தலைமை அலுவலகத்திற்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பாக இந்த பொருட்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்கவில்லை.

அதிகார சபையானது 2019 ஆம் ஆண்டு நிதி குத்தகை அடிப்படையில் 3 மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்திருந்ததுடன், சுற்றறிக்கையிலுள்ள விதிமுறைகளின்படி, அதிகார சபைக்கு சொந்தமான மூன்று வாகனங்கள் இதற்காக அகற்றப்பட்டு, அதன் மூலம் கிடைக்கும் வருமானம் பொது திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், அகற்றுவதற்கு முன்மொழியப்பட்ட ஒரு வாகனம் அவ்வாறு அகற்றப்படாமல் 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் வரை அதிகார சபையின் வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது. மேலும் எஞ்சிய இரண்டு வாகனங்கள் அகற்றப்பட்டதன் மூலம் பெறப்பட்ட ரூ.5,773,000 தொகை, இரண்டு வருடங்கள் கழிந்தும் கூட திறைசேரிக்கு செலுத்தப்படாமல் அதிகார சபையால் பிடித்து வைக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு சேவைக்கும் கட்டணங்கள், மதிப்பிடப்பட்ட கால அளவுகள் உள்ளிட்ட பிரஜை சாசனங்கள், அலுவலக வளாகங்கள் என்பன பற்றிய விபரங்கள் இணையதளங்களில் பொதுமக்கள் / வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்பதை தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுதிசெய்ய வேண்டும். இருப்பினும், இந்த அறிவுறுத்தலுக்கு இணங்க அதிகார சபை செயல்பட்டிருக்கவில்லை.

(e)	நல்லாட்சிக்கான பொதுத் தொழில்முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல்கள் பற்றிய 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதிய PED/12 பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை	
1.	பந்தி 42.5	மதிப்பாய்வு மற்றும் கலந்துரையாடல்கள் ஆகியவற்றுக்கான பொருள் பாவனை காலப் பகுப்பாய்வை மாதாந்த அடிப்படையில் சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றிருந்தாலும், கணக்கியல் கட்டமைப்பிலிருந்து பொருள் பாவனை கால பகுப்பாய்வு அறிக்கையை அதிகார சபை தயாரிக்கும் நிலையில் இருக்கவில்லை. எனவே, பொருள் பாவனை காலத்தின் அடிப்படையில் மெதுவாக நகரும், நகராத மற்றும் வழக்கற்றுப் போன பொருட்களை கண்டறிவதில் அதிகார சபை சிரமங்களை எதிர்கொள்கின்றது.
2.	பந்தி 6.5.3	2019 ஆம் ஆண்டுக்கான அதிகார சபையின் வருடாந்த அறிக்கை இந்த அறிக்கை வெளியிடப்பட்ட நாள் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.
3.	பந்தி 9.14	மனித வள முகாமைத்துவம் தொடர்பான அனைத்து விடயங்களிலும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை முன்வைக்கின்ற நடைமுறைகள் அடங்கிய கையேடு இருக்க வேண்டும் என்றிருந்தாலும், அதிகார சபையின் மனித வளங்களை சுமுகமாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் நிருவகிப்பதற்கு அதிகார சபையிடம் அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கையேடு ஏதும் இருக்கவில்லை.
(f)	2016 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவு	எரிபொருளின் நுகர்வு ஒவ்வொரு எரிபொருள் சோதனையிலிருந்தும் 12 மாதங்களுக்குப் பிறகு அல்லது 25,000 கிமீ தூரம் ஓடிய பிறகு அல்லது இயந்திரத்திற்கு பாரிய பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்பட்ட பிறகு எது முதலில் நிகழ்கின்றதோ அப்போது மீண்டும் சோதிக்க வேண்டும் எற்றிருந்தாலும், அதிகார சபைக்கு

சொந்தமான 50 வாகனங்கள் தொடர்பில் கணக்காய்வு செய்வதற்கு அதிகார சபை அத்தகைய எரிபொருள் பரிசோதனை அறிக்கையை சமர்ப்பித்திருக்கவில்லை.

3. 2015 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதிய PED/01/2015 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் பற்றிய சுற்றறிக்கை

அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் மட்டுப்பாட்டை விஞ்சி 05 உத்தியோகத்தர்களால் 4,436 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 621,076 பெறுகை தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 12 (g) ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார சபை அதன் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகள் என்பவற்றின் அடிப்படையில் செயற்படவில்லை என்பதைத் தவிர

நிர்மாண கைத்தொழில் தொடர்பான ஒரு தரவுத்தளத்தை பேணிப் பராமரித்தல், நிர்மாண வேலைகளின் போது உள்நாட்டு உற்பத்திகளின் அபிவிருத்தியையும் மற்றும் பாவனையையும் ஊக்குவித்தல் மற்றும் நிர்மாண கைத்தொழிலின் ஏதாவது ஒரு மூலப்பொருள், பொறித் தொகுதி மற்றும் இயந்திரம் ஆகியன சம்பந்தமான தேவைப்பாடுகளை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல், ஏனைய நாடுகளில் நிர்மாண பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றும் வகையில் உள்நாட்டு ரீதியில் பதிவு செய்த நிர்மாண ஒப்பந்த தரப்புகளை ஊக்குவித்தல் மேலும் அத்தகைய தரப்புகளுக்கு உதவுதல் மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தை தாபித்தல், நிர்மாண வணிகத்தில் தேர்ச்சியுடைய தொழிலாளர்களை பதிவு செய்து அத்தகைய தொழிலாளர்களுக்கு தேர்ச்சி அடையாள அட்டைகளை விநியோகித்தல், நிர்மாண கைத்தொழிலில் பயன்படும் நிர்மாண துணைப் பொருட்கள், நிர்மாண மூலப்பொருட்கள் என்பவற்றை இறக்குமதி செய்கின்ற தரப்புகளினதும், உற்பத்தி தரப்புகளினதும் மற்றும் விநியோக தரப்புகளினதும் ஒரு விபரக்கொத்தை பேணுதல் முதலிய செயற்பாடுகள் 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க நிர்மான கைத்தொழில் அபிவிருத்தி சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையினால் மேற்கொண்டு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (h) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அதிகார சபையின் வளங்கள் பொருளாதார ரீதியாகவும் மற்றும் திறமையாகவும் அதே போல் பயனுள்ள வகையிலும் குறித்த கால எல்லைக்குள் ஏற்புடைய சட்டங்களுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பதை குறிப்பிடுவது தவிர;

கணக்காய்வின் நிமித்தம் வழங்கிய தகவல்களின்படி, ரூ. 103,263,865 பெறுமதியான பயிற்சி கருவிசாதனங்களும், ரூ. 10,054,498 பெறுமதியான பயிற்சிப் பொருட்களும் (பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்சியாளர் வழிகாட்டிகள் மற்றும் பதிவு புத்தகங்கள்) மற்றும் ரூ.50,146,836 பெறுமதியான சீருடைகளும் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் செயற்படுத்தப்பட்ட நிர்மாண கைத்தொழில் திறன் பயிற்சி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டன. அரசாங்கத்தின் கொள்வனவு வழிகாட்டுதல்களில் காணப்படும் வழிகாட்டல்களை மீறி, தரம் குறைந்த பொருட்களைக் கொள்வனவு செய்ததால், மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அதிகார சபைக்கு 52.25 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருந்தது.

2.3 ஏனைய விடயங்கள்

1. பொது திறைசேரி மொத்தம் 1,077 மில்லியன் ரூபா பெறுமதியான இம்ப்ரெஸ்ட் IQகளை 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் PPP மாதிரியுடைய நிர்மாண கைத்தொழிலின் நிமித்தம் திறன்கள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு அதிகார சபைக்கு நிரல் அமைச்சின் ஊடாக விடுவித்துள்ளது. இவற்றில் 114.2 மில்லியன் ரூபா தொகையானது உத்தேச நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாமல் 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரை ஒரு வங்கி நடைமுறை கணக்கில் வைப்பு செய்யப்பட்டிருந்தது.

2. 2019 ஆம் ஆண்டு மற்றும் 2020 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டு காலப் பகுதியில் நிர்மாண துறையில் ஈடுபட்ட திறன் கைவினைஞர்களுக்கு கைவினை அடையாள அட்டையை வழங்கும் நிமித்தம் ரூ.35.7 மில்லியன் பொது திறைசேரியிலிருந்து பெறப்பட்டது. இதில் ரூ. 11.3 மில்லியன் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 2019 ஆம் ஆண்டில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (ICTA) முற்பணமாக வழங்கப்பட்டது. எனினும் இந்த பணி 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்ய வேண்டும் என்றிருந்தாலும் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இறுதி வரையிலும் நிறைவு செய்யப்படவில்லை.

   மேலும், முற்பணமாக ரூ. 11.3 மில்லியன் ICTA நிறுவனத்திடம் இருந்து இரண்டு வருடங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளது. எனினும் ஏற்பட்டிருந்த நிதி இழப்பைக் கணக்கிட்டு பொறுப்புடைய நபர்களிடம் இருந்து மீளப்பெற அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. கல்குளத்தில் இயக்கப்படும் பயிற்சிக் கல்லூரியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பொது திறைசேரியிலிருந்து ரூ.135 மில்லியன் பெறப்பட்டது. அதில், 26 சதவீதத்திற்கு சமனான ரூ.34.6 மில்லியன் உத்தேசித்திருந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப் படவில்லை மற்றும் அதிகார சபையின் வங்கி நடப்புக் கணக்கில் அந்த நிதித் தொகை செயலற்ற நிலையில் வைக்கவும்பட்டிருந்தது.

4. கணக்காய்வுக்காக வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வு ஆண்டில் 10 சந்தர்ப்பங்களின் போது 08 வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன. மேலும் 06 வாகனங்களின் விபத்துகள் தொடர்பான காப்புறுதி கோரிக்கைகள் மட்டுமே அந்தந்த காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து கோரப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், எஞ்சிய 04 வாகன விபத்துக்களால் ஏற்பட்ட இழப்பு மற்றும் வாகன விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கைகள், இறுதி அறிக்கைகள் என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5. அதிகார சபைக்கு சொந்தமான ரூ.6,981,250 பெறுமதியான ஆறு வாகனங்கள் (ஒரு வாகனம் தவிர) 02 முதல் 05 ஆண்டு காலமாக அழிந்துபோகக்கூடிய நிலையில் CETRAC இன் வளாகத்தில் பயன்படுத்தப்படாமல், பழுதுபார்க்கப்படாமல் அல்லது அகற்றப்படாமல் இருந்தன.

   (f) 2006 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியுடன் தொடர்புடைய ரூ.14,977,525 தொகையான EPF நிலைவை கொடுப்பனவு செலுத்தப்படாத காரணத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்தின் மூலம் (ஊசேநி) ரூ.5,691,460 மிகைக்கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இந்த செலுத்த வேண்டிய தொகை 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

6. 2018, 2019, 2020 ஆம் ஆண்டுகளில் அதிகார சபையின் தலைமை அலுவலகத்தால் பேணப்பட்டு வருகின்ற நடைமுறை கணக்கில் முறையே சுமார் ரூ.202 மில்லியன், 260 மில்லியன், ரூ.357 மில்லியன் நிலுவைத் தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த நிலுவை ஏதேனும் நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதியில் ரூ.426 மில்லியன் வரை அதிகரித்து இருந்தது. இதன் விளைவாக, 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் வரையான காலப் பகுதியில் வங்கியின் நடைமுறை கணக்கில் மேற்கூறிய பணம் செயலற்ற நிலையில் இருக்க அனுமதித்ததன் மூலமாக ஏறத்தாழ ரூ.98 மில்லியன் நிதி இழப்பு அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்தது.

7. கல்குளத்தில் சுற்றுலா பங்களா ஒன்றை நிர்மாணிக்கும் பொருட்டு ரூ.17,296,564 தொகைக்கு 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகளின் பிரகாரம் இந்த சுற்றுலா பங்களா அந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட திகயிலிருந்து 210 நாட்களுக்குள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், இந்த சுற்றுலா பங்களா 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 திகதியில்தான் நிறைவு செய்யப்பட்டு அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால், ஒழித்துக்கட்டல் நட்டங்களை அறவிடுவதற்கு அந்த ஒப்பந்தத்தில் எந்த விதமான நிபந்தனைகளும் உள்ளக்கப்பட்டு இருக்காத காரணத்தால், தாமதமான காலத்திற்கு ஒழித்துக்கட்டல் பாதிப்புகளின் நிமித்தம் எந்தவித நஷ்டஈட்டையும் அதிகார சபையால் கோரக் கூடியதாக இருக்கவில்லை.

8. மொத்த கடன் நிலுவைகளில் ரூ. 14,173,303, தொகை 06 கடனாளிகளிடம் இருந்து மட்டுமே ரூ. 1,794,089 தொகைக்கான உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப் பட்டன. பிற கடனாளிகள் 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் அவர்களின் நிலுவை தொகைகளை உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

மேலும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடப் பகுப்பாய்வின்படி, மொத்தக் கடன் ரூ. 5,115,648 தொகை 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியிலும் கூட மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக மீளப் பெறப்படாமல் நிலுவையாக இருந்திருந்தது. மேலும் இந்தத் தொகையானது 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் மீளப் பெறப்பட்டிருக்கவில்லை.

(g) வர்த்தக கடன் மற்றும் நானாவித கடன்கள் மொத்தம் ரூ. 4,135,111 தொகை 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக இருந்திருந்தது,. மேலும் இந்த நிலுவை தொகை 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(k) 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க நல்லாட்சிக்கான பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவுகளில் காணப்படுகின்ற ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகார சபையின் ஊழியர் ஒருவர் நிரல் அமைச்சுக்கு 2015 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 09 ஆம் திகதி செயல்வலுப் பெறும் வகையில் விடுவிக்கப்பட்டிருந்தார் / இணைக்கப்பட்டிருந்தால். 2015 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 09 ஆம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிற்கு இந்த உத்தியோகத்தருக்கு சுமார் ரூ.4,687,732 சம்பளமும் ஏனைய கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதி வரையிலும் உரிய நிரல் அமைச்சிலிருந்து மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கையெழுத்திட்டது: டப்ளியூ.பி.சி. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் அதிபதி

4.0 செயலாற்றல் குறிகாட்டிகள்

	குறித்துரைத்த குறிகாட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக உண்மையான வெளியீடு		
		100%- 90%	75%-89%	50%-74%
	CIDA பதிவு மற்றும் பங்குதாரர்களின் தரப்படுத்தலின் செயல்பாடுகள்	>100		
	தேசிய கட்டுமான சிறப்பு மற்றும் செயல்திறன் விருதுகளை முன்னேற்றத்துடன் நடத்துதல்.		83	
	தகுதியான நபர்களின் பட்டியல். (உறுப்பினர் அல்லா தகுதி வாய்ந்த நபர்களின் எண்ணிக்கை)			<50
	4.1 பங்குதாரர்களுக்கான கருத்தரங்குகள் ∴ பட்டறைகளை நடத்துதல்.			<50
	4.2 - பதிவு செய்வதற்கான CCD புள்ளிகளைக் கருத்தில் கொள்ளுதல். (களின் எண்ணிக்கை:: பெறப்பட்ட CCD)			<50
	CIDA ஜர்னல்	>100		
	தொழில்நுட்ப கணக்காய்வு			<50
	தீர்ப்பாளர் சேவை		78	
	விழிப்புணர்வு நிகழ்ச்சி			<50
	தொழில்துறை சேவை பிரிவின் ஆலோசனை சேவையை வழங்குதல்	>100		
	திட்ட முகாமைத்துவ சேவைகள;/ஆலோசனை			<50
	வெளியீடு		78	
	கட்டுமான பொருளாதாரம்	>100		
	இலங்கைக்கான தேசிய கட்டிடக் குறியீடு			<50
	செலவு தரவுத்தளம்			<50
	கட்டுமான கைவினைஞரின் பதிவு			<50
	மேற்பார்வை மற்றும் மேலாண்மை பணியாளர்களின் பதிவு			<50
	சிறிய மற்றும் நடுத்தர ஒப்பந்ததாரரின் திறனை வளர்க்க பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துங்கள்			<50
	வெளியீடுகளின் விற்பனை (இலக்குகள் விற்கப்படும் வெளியீடுகளின் எண்ணிக்கையில் நிர்ணயிக்கப்படுகின்றன)			<50
	* பொது-தனியார் கூட்டு (பிபிபி) மாதிரியுடன் கட்டுமானத் துறையில் திறன் மேம்பாடு			<50
	*பதிவுசெய்யப்பட்ட திறமையான கட்டுமானக் கலைஞர்களுக்கு கைவினை அடையாள அட்டை வழங்குதல்			<50
	பயிற்சி திட்டங்கள்		79	
	கருத்தரங்குகள் ∴ பட்டறைகள்			<50
	மொத்த தனிப்பயன் வடிவமைப்பு பயிற்சி நடவடிக்கைகள்	>100		
	NVQ பயிற்சி			<50
	பிற வருமானம் (ஆடிட்டோரியம், கருத்தரங்கு அறைகள், கணினி ஆய்வகம் போன்றவை.), வசதி பணியமர்த்தல், தேர்வுக் கட்டணம், வளாக வாடகை, வெளியீடுகளின் விற்பனை, இதர வருமானம்		73	
	* மின் கற்றல் மற்றும் நேரடி ஒளிபரப்பு அலகு நிறுவுதல்.			<50

	நிர்மாண உபகரண பயிற்சி நிலையம்			
1	பயிற்சி திட்டங்கள்		79	
2	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஒப்பந்ததாரர் மேம்பாட்டு திட்டங்கள்			59
3	பட்டறை பழுதுபார்த்தல்/நடத்துதல் வர்த்தக சோதனைகள் மற்றும் ஆலோசனை சேவைகள்.'.இதர இதர பணிமனை வேலைகள் மற்றும் உபகரணங்கள் பணியமர்த்தல்	>100		
4	*கட்டுமான கருவி மெக்கானிக் படிப்பு			<50
5	வாகன பழுது			<50
6	*13 வருட உத்திரவாத கல்வி	>100		
நிர்மாண உபகரண செயற்படுத்துனர் பயிற்சி நிலையம்				
1	பயிற்சி திட்டங்கள்			65
2	இயந்திர பணியமர்த்தல்			<50
3	13 வருட உத்திரவாதக் கல்வித் திட்டம் - கட்டுமான உபகரண ஆபரேட்டர் பயிற்சி			<50
4	OTC இன் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியை மேம்படுத்துதல்			<50
முனித வளம் மற்றும் நிர்வாகம்				
1	பணியமர்த்துபவர்கள் (ஆடிட்டோரியம், மாநாட்டு அறை மற்றும் கருத்தரங்கு அறைகள், சுற்றுலா விடுதிகள், CGF)		89	
2	உள்ளுர் பயிற்சி			<50
3	வெளிநாட்டு பயிற்சி			<50
4	மருத்துவ காப்புறுதி			<50
5	*தலைமை அலுவலக கட்டிடம் பராமரிப்பு மற்றும் பயிற்சி மையங்களின் மறுசீரமைப்பு			<50

5.0 மனிதவள விபரக்கோவை

5.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரித்த பதவியணி	உள்ளபடியான பதவியணி	வெற்றிடங்கள்/ (மேலதிகம்)**
சிரேஷ்ட	36	30	6
மூன்றாம் நிலை	71	48	23
இரண்டாம் நிலை	123	92	31
கனிஸ்ட	160	112	48
மொத்தம்	390	282	108

5.2 மனிதவளத்தின் பற்றாக்குறை அல்லது மிகையானது நிறுவனத்தின் செயலாற்றலை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை சுருக்கமாகக் கூறிப்பிடுதல்

நிறுவனத்தில் அனைத்து மட்டங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் முழுமையாக ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. சிஐடி சட்டத்தின் உட்பிரிவுகளின்படி பணிகளை முடிப்பதற்கும் திட்டங்களைச் சாதிப்பதற்கும் அதிக நேரம் எடுத்துக் கொள்வதற்கு ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாகும். கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் தேர்தல் காலம் காரணமாக, காலியிடங்களை நிரப்ப முடியவில்லை, ஆனால் 13.08.2020 அன்று வெளியிடப்பட்ட மிகவும் அத்தியாவசியமான காலியான அஞ்சல் தாள் விளம்பரத்தை நிரப்ப முடியவில்லை. அதன்படி, ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

	பதவியணியினரின் இயலளவு அபிவிருத்தி						
இல.	நிகழ்ச்சியின் பெயர்	பயிற்றப்பட்டோர் எண்ணிக்கை	பயிற்சிக் காலம்	மொத்த முதலீடு (ரூபா)		நிகழ்ச்சியன் தன்மை	விளைவு / பெறப்பட்ட அறிவு
				ஊள்நாடு	வெளிநாடு		
01	பொது சொத்து சட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி	68	1 நாள்	இலவசம்		உள்நாடு	அறிவு மேம்பட்டது
02	கட்டுமான உபகரண பராமரிப்பு தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளமோ	1	1 ஆண்டு	140,000.00		உள்நாடு	தொழில்நுட்ப திறன்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன
03	"ஒத்துழைப்புத் திட்டம்" வேலைக் கடையிலிருந்து	35	1 நாள்	116,325.00		உள்நாடு	கூட்டிணைந்த திட்டத்தின் இறுதிப் பதிப்பை மேம்படுத்தும் திறன் மேம்படுத்தப்பட்டது
04	KPI திட்டத்தை உருவாக்குதல்	24	1 நாள்	5,967.00		உள்நாடு	அறிவு பெறப்பட்டது மற்றும் KPI இறுதி செய்யப்பட்டது.
	மொத்தம்	128		262,292.00			

6. இணங்கியொழுகுதல் அறிக்கை

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழுகுதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழுகாமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
1	**பின்வரும் நிதிநிலை அறிக்கைகள்/கணக்குகள் உரிய தேதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	ஆண்டு நிதி அறிக்கைகள்	இணங்கியது		
1.2	பொது அதிகாரிகள் கணக்கில் முன்பணம்	இணங்கியது		
1.3	வர்த்தகம் மற்றும் உற்பத்தி முற்பண கணக்குகள் (வணிக முற்பண கணக்குகள்)	இணங்கவில்லை	அதிகாரம் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை	
1.4	களஞ்சிய முற்பண கணக்குக	இணங்கவில்லை	எங்கள் அதிகாரத்தில் கடை வைத்திருப்பது வணிகமாக கருதப்படவில்லை	
1.5	விசேட முற்பண கணக்குகள்	இணங்கியது		
1.6	மற்றவைகள்			
2	**புத்தகங்களையும் பதிவேடுகளையும் பராமரித்தல் (FR445)/**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் அடிப்படையில் நிலையான சொத்துக்கள் பதிவு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.2	தனிப்பட்ட ஊதியங்கள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகள் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கியது		
2.3	கணக்காய்வு ஐயவினவல்களின் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.4	உள் கணக்காய்வு அறிக்கைகளின் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.5	அனைத்து மாதாந்திர கணக்கு சுருக்கங்கள் (CIGAS) தயாரிக்கப்பட்டு, உரிய தேதியில் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்படுதல்	இணங்கவில்லை	பொது நிறுவனம் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்கள் (CIGAS) திட்டத்தின் மூலம் செயல்பட அறிவுறுத்தப்படவில்லை	PED 19 இன் படி நிர்வாகக் குழுவிடம் மாதாந்திர கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன
2.6	காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டன	இணங்கியது		
2.7	இருப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.8	களஞ்சியப் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழுகுதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழுகாமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
2.9	இழப்புகள் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.10	கடப்பாட்டு பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணங்கியது		
2.11	அடியிதழ் புத்தகங்களின் பதிவேடு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது (GA - N20)	இணங்கியது		
3	நிதி கட்டுப்பாடு (FR 135) க்கான செயல்பாடுகளின் பகிர்ந்தளித்தல்			
3.1	நிறுவனத்திற்குள் நிதி அதிகாரம் பிரித்து ஒப்படைக்கப்பட்டது	இணங்கியது		
3.2	நிதி அதிகாரத்தின் குறித்து நிறுவனத்திற்குள் தெரிவிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் மூலம் செயற்படுத்தும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு, கட்டுப்பாடுகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன	இணங்கியது		
3.4	11.05.2014 தேதியிட்ட அரச கணக்குச் சுற்றறிக்கை 171/2004 இன் அடிப்படையில் கணக்காளர்கள் அரசாங்க ஊதியப் பட்டியல் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துகின்றனர்.	இணங்கியது		
4	வருடாந்திர திட்டங்களை தயாரித்தல்			
4.1	ஆண்டு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
4.2	ஆண்டு கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
4.3	ஆண்டு உள் தணிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
4.4	ஆண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுஇ உரிய தேதியில் டீனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
4.5	ஆண்டு பணப்புழக்கம் இரண்டுஇ கருவூல செயல்பாட்டுத் துறைக்கு சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
5	தணிக்கை வினவல்கள்			
5.1	க்கான செயல்பாடுகளின் பிரதிநிதித்துவம்	இணங்கியது		
6	நிதி கட்டுப்பாடு (குசு 135)			
6. 1	நிதி ஆணையம் இருந்துள்ளது	இணங்கியது		

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழுகுதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழுகாமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
6.2	நிறுவனத்திற்குள் ஒப்படைக்கப்பட்டது	இணங்கவில்லை	உரிய தகவல்களை சேகரிக்கும் பணியில் தாமதம் ஏற்பட்டதால்	பதிலுக்கான தகவல்களைச் சேகரிக்க நேரம் எடுத்தால்; இடைக்கால பதில் அனுப்பப்படும்
6.3	நிதி அதிகாரத்தின் பிரதிநிதிகள்	இணங்கியது		
6.4	நிறுவனத்திற்குள் தெரிவிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
7	அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது			
7.1	ஒவ்வொரு பரிவர்த்தனையையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் மூலம் அனுப்பும் வகையில்	இணங்கியது		
8	அதிகாரிகள்			
8.1	கட்டுப்பாடுகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன	இணங்கியது		
8.2	11.05.2014 தேதியிட்ட மாநிலக் கணக்குச் சுற்றறிக்கை 171.'.2004 இன் அடிப்படையில் கணக்காளர்கள் அரசாங்க ஊதியப் பட்டியல் மென்பொருள் தொகுப்பைப் பயன்படுத்துகின்றனர்.	இணங்கியது		
	வருடாந்திர திட்டங்களை தயாரித்தல்	இணங்கியது		
8.3	ஆண்டு செயல் திட்டம் உள்ளது	இணங்கியது		
8.4	தயார் செய்யப்பட்டது	இணங்கியது		
8.5	ஆண்டு கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
9	ஆண்டு உள் தணிக்கை திட்டம் உள்ளது			
9.1	தயார் செய்யப்பட்டது	இணங்கியது		

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழுகுதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழுகாமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
9.2	ஆண்டு மதிப்பீடு உள்ளது	இணங்கவில்லை	கால அவகாசம் இல்லாதது	எதிர்காலத்தில் உரிய நேரத்தில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்
9.3	உரிய தேதியில் மேனுயை தயாரித்து சமர்பித்தார்	இணங்கியது		
9.4	ஆண்டு பணப்புழக்கம் இரண்டு	இணங்கியது		
9.5	கருவூல செயல்பாட்டுத் துறைக்கு சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டது	இணங்கியது		
9.6	தணிக்கை வினவல்கள்	இணங்கியது		
10	அனைத்து தணிக்கை கேள்விகளுக்கும் தணிக்கையாளர் ஜெனரலால் குறிப்பிட்ட நேரத்திற்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளது			
10.1	உள்துறை தணிக்கை	இணங்கியது		
10.2	நிதி ஒழுங்குமுறை 34(.'.)னுஆயுட209 இன் அடிப்படையில் ஆடிட்டர் ஜெனரலைக் கலந்தாலோசித்து, ஆண்டின் தொடக்கத்தில் உள் தணிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டது.	இணங்கியது		
10.3	அனைத்து உள் தணிக்கை அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
11	அனைத்து உள் தணிக்கைகளின் நகல்கள்			
11.1	தேசிய தணிக்கைச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் மேலாண்மை தணிக்கைத் துறைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2018 இன் 19	இணங்கியது		
11.2	நிதி ஒழுங்குமுறை 134(3) இன் அடிப்படையில் உள் தணிக்கை அறிக்கைகளின் அனைத்து நகல்களும் ஆடிட்டர் ஜெனரலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணங்கியது		
12	தணிக்கை மற்றும் மேலாண்மை			
12.1	குழு	இணங்கியது		
12.2	னுஆயு சுற்றறிக்கை 1-2019 இன் படி, தணிக்கை மற்றும் மேலாண்மைக் குழுவின் குறைந்தபட்சம் 04 கூட்டங்கள் இந்த ஆண்டில் நடத்தப்பட்டுள்ளன.	இணங்கியது		
12.3	சொத்து மேலாண்மை	இணங்கியது		
13	சொத்து மேலாண்மைச் சுற்றறிக்கை எண். 01.'.2017ன் பத்தி 07ன் படி, சொத்துக்கள் வாங்குதல் மற்றும் அகற்றல் பற்றிய			

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழுகுதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழுகாமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
	தகவல்கள், கட்டுப்பாட்டாளர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.			
13.1	விதிகளை செயல்படுத்த ஒருங்கிணைக்க பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டார்	இணங்கியது		
13.2	மேற்கூறிய சுற்றறிக்கையின் 13வது பத்தியின்படி சுற்றறிக்கை மற்றும் நியமனம் செய்யப்பட்ட அதிகாரியின் விவரங்கள் கன்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.	இணங்கியது		
14	கணக்கெடுப்பு வாரியங்கள் நடத்தப்பட்டன			
14.1	மற்றும் பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 05.'.2016இன் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்திடம் உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது.	இணங்கியது		
14.2	கணக்கெடுப்பு வாரியம் மற்றும் பிற தொடர்புடைய பரிந்துரைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட அதிகப்படியான மற்றும் பற்றாக்குறைகள், சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.	இணங்கவில்லை	ஒரு மாதத்திற்கும் மேலாக இந்த முன்பணம் உள்ளது	அதிகாரசபையின் சுற்றறிக்கையின்படி, உயர்நிலை தீர்க்கப்படும் வரை சம்பளம் நிறுத்தப்படும்
14.3	கண்டனக் கட்டுரைகளை அகற்றுவது இருந்தது	இணங்கியது		
14.4	குசு 772 இன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது	இணங்கவில்லை	அரச கூட்டுத்தாபனங்களும் சட்ட சபைகளும் கருவூலக் கணக்குகளைப் பராமரிப்பதில்லை	PED 19 இன் படி மாதாந்திர கணக்கு அறிக்கையை அதிகார மேலாண்மை வாரியத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்
15	வாகன மேலாண்மை			
15.1	தினசரி இயங்கும் விளக்கப்படங்கள் மற்றும் மாதாந்திர	இணங்கியது		
15.2	பூல் வாகனங்களின் சுருக்கங்கள் தயாரிக்கப்பட்டு உரிய தேதியில் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன	இணங்கியது		
15.3	கண்டனம் செய்யப்பட்ட வாகனங்கள் இருந்தன	இணங்கவில்லை	மாநில நிறுவனங்கள் மற்றும் சட்டப்பூர்வ வாரியம் அவ்வாறு செய்ய அறிவுறுத்தப்படவில்லை	தணிக்கை மேலாண்மை குழு மற்றும் அதிகார சபை நிர்வாகத்திற்கு பற்றாக்குறை வருவாய் அறிக்கைகளை சமர்ப்பித்தல்
16	குறைவான காலத்திற்குள் அகற்றப்படும்			

இல.	பிரயோகிக்கத்தக்க தேவைப்பாடு	இணங்கியொழுகுதல் நிலை (இணங்கப்பட்டமை / இணங்கப்படாமை)	இணங்கியொழுகாமை விபரம்	இணங்கியொழுகாமை தொடர்பில் எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை
16.1	கண்டித்து 6 மாதங்களுக்கு பிறகு	இணங்கியது		
16.2	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டன	இணங்கியது		
16.3	விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது	இணங்கியது		
17	எ.ப்.ஆர். ஒவ்வொரு வாகன விபத்துக்கும் 103, 104, 109 மற்றும் 110			
17.1	வாகனங்களின் எரிபொருள் நுகர்வு உள்ளது	இணங்கியது		
17.2	பத்தி 3.1 இன் விதிகளின் அடிப்படையில் மீண்டும் சோதிக்கப்பட்டது	இணங்கியது		
17.3	29.12.2016 இன் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 30.'.2016	இணங்கியது		
18	குத்தகைக்கு விடப்பட்டவரின் முழுமையான உரிமை			
18.1	குத்தகை காலத்திற்குப் பிறகு வாகன பதிவு புத்தகங்கள் மாற்றப்பட்டுள்ளன	இணங்கியது		
18.2	வங்கி கணக்குகளின் மேலாண்மை	இணங்கியது		
19	வங்கி சமரச அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, உரிய தேதிக்குள் தணிக்கைக்குத் தயாராகிவிட்டன.			
19.1	இருந்த செயலற்ற கணக்குகள்	இணங்கியது		
19.2	மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அல்லது முந்தைய ஆண்டுகளில் இருந்து தீர்வு காணப்பட்டது	இணங்கியது		
19.3	வங்கி நல்லிணக்க அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட நிலுவைகள் தொடர்பான நிதி ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது மற்றும் எதற்காக சரிசெய்தல் செய்யப்பட வேண்டும் மற்றும் அந்த நிலுவைகள் ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்பட வேண்டும்.	இணங்கியது		
19.4	விதிகளின் பயன்பாடு	இணங்கியது		
20	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் வரம்பை மீறாமல் செலவிடப்பட்டன			
20.1	குசு 94(ஐ) இன் படி ஆண்டின் இறுதியில் எஞ்சியிருக்கும் விதிகளை மீறாத பொறுப்புகள்	இணங்கியது		